
விலை: 12.00 ரூபா

# வாழ்க்கை

சிறப்பாசிரியர்: புலவர் ஈழத்துச் சிவானந்தன்

42
பொதுசன நூலகம்
1992





★ கண்ணதாசனைக் கண்டேன்

★ வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?...

உள்ளே வாருங்கள்..

## இது ஒரு குடும்ப இங்கிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையே...! வருக. வருக!
வாக்கினில் இனிமை தருக.
நினைவில் நல்லது தருக
நீ எங்களுக்கு!
நாங்கள் மக்களுக்கு,

# Hotel Island

All varieties of High Class Vegetarian Dishes
Rooms available under one roof at Island Lodge

141, SRI KATHIRESAN STREET,
COLOMBO-13.
SRI LANKA.

Tel: Lodge: 547410
543358
Hotel: 436625

---

'வாழ்க்கை' வளர்க!
கீழ்க்கை தளர்க
மக்கள் மகிழ்க
மனிதம் மலர்க,

எல்லோரும் இன்புற்றிருக்க
வாழ்க்கை இதழ் வழிகாட்டியாகட்டும்,
வாழ்த்துகின்றோம்.

# NEW KALYANI STORES

General Merchants & Commission Agents,
Wholesale & Retail Dealers in Groceries and Produce.

189, 5th CROSS STREET,
COLOMBO-11.

Phone: 20331

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்கல்லூரி சிவ நூலகம்



# வாழ்க்கை

## வாழ்க்கை விளக்கம்

வாழ்க்கை - அருமையான தமிழ்ச் சொல். தமிழின் சிறப்பெழுத்தான 'ழ' கரம் இதன் ஆழத்தை அறிவிக்கின்றது. சிறப்பின் சீர்மையால் மனிதன் செழுமைப்படவேண்டும்.

மனிதனே வாழ்க்கைக்குரியவன் மற்றவை வசிப்புக்குரியவை. வாழ்க்கையில் இதயம் இருக்கும் வசிப்பில் இருப்பது சதையமே. புசித்தல் மட்டுமே வசித்தலின் இருப்பு. புசித்தலுக்கு அலையும் மிருகங்களிடத்தில் இதயத்தைக் காண முடியாது.

இதயத்துள் இரக்கம் அன்பு பாசம் நேசம் முதலியவை பயிராய் வளர்ந்து பண்பாய் விளங்கும், இவற்றின் பயனே மனிதன் என்னும் மகத்துவத்தை கட்டி எழுப்பும் அத்திபாரம் அத்திபாரம் இல்லாத கட்டிடம் இல்லை. ஆனால் அத்திபாரம் ஆட்டம் காணும் கட்டிடங்கள் உண்டு. இவைபோல் மனிதத்தின் அத்திபாரம் ஆட்டங்கண்டிருக்கும் காலம் இது.

காலத்தின் தேவை கருதி நாம் சில கடமைகளைச் செய்யவேண்டும். அந்த கடமைகளில் கலை கனிவு கண்ணியம் புண்ணியம் முதலியன கலக்க வேண்டும்: மருந்துக்கலவைகளால் உடல் நோய் தீர்க்கும் நாம். கலைக் கலவைகளால் வாழ்க்கை வருத்தங்களைப் போக்க வேண்டும்.

வாழ்க்கை வருத்தங்கள் பலப் பல. நம்மில் பலருக்கு இருக்கும் வாழ்க்கை வருத்தங்களைப் பார்த்தால் - பார்வையாளனுக்கே வருத்தம் வந்து விடும் போலிருக்கிறது உடல் நோய்கள் தான் தொற்றும் என்பதில்லை. வாழ்க்கை வருத்தங்களும் தொற்று நோய்களே.

நாம் இங்கு மனநோய் பற்றிக் குறிப்பிடவில்லை. ஒரு வகை மனித நோய்பற்றியே குறிப்பிடுகிறோம். இந்த நோய் தீர்க்கப்படக் கூடியது. தீர்க்கவேண்டியது.

சமுதாயத்தில் பல சிக்கலுக்கு காரணமான வாழ்க்கை வருத்தங்களைப் போக்கும் ஓர் எண்ண மருத்துவ மனையே வாழ்க்கை இதழ். இந்த மருத்துவ மனையின் வளர்ச்சி நமக்குப் பல விளக்கங்களைக் கந்து வாழ்வாங்கு வாழச் செய்யும்.

## எங்கள் இறைவா!

எல்லாம் வல்ல பரம் பொருளே. எங்கள் விருப்பம் இல்லாமல் உங்கள் விருப்பத்தாலேயே இந்தப்பூமிக்கு வந்தோம்

திக்குத்திசை தெரியாத எங்களுக்கு நீயே வழிகாட்டி. எங்கள் வழிபாட்டில் உன் வழிகாட்டல் விளக்கமாய் விரியவேண்டும்.

எங்கள் வாழ்க்கை புனிதமானது. அருமையானது. அர்த்தமுள்ளது. பயனுக்குரியது. மானிடமாதல் அரியது. ஆனால் அது எங்களுக்கு உரியதாகியது. அதனைத் தந்தவனே உனக்கு வந்தனம்.

எங்கள் அருமைகள், உரிமைகள், பெருமைகள் எல்லாம் எங்களாலேயே அகற்றப்படுகின்றன, அழிக்கப்படுகின்றன, இந்தக் கொடுமை ஏன் நடக்கிறது? விதி என்பாயா? மதிஎன்பாயா?

மதிக்குப் பிடிபடாதவையை விதிக்குள் அடக்கலாம் மதி இருந்தும் எங்கள் வாழ்க்கை கீழ்க்கையாவது ஏன்?

ஆரோகணமாக வேண்டிய வாழ்க்கையை அவரோகண மாக்கும் கீழ்கைராகம் எங்கள் சங்கீதத்தில் கலக்காமல் அருள்வாயாக. எங்கள் சோககீதங்களுக்கு சுருதிசேர்ப்போரைச் சும்மா இருக்கச்சொல்லு,

சும்மா இருப்பது எல்லோர்க்கும் நல்லது என்று அருளி எங்களைத் தாங்கிக் கொள்வாயாக. தளர்ந்தவர்கள், வளர்ந்தவர்களைத் தானே பற்றவேண்டும்.

பாரொடு விண்ணாய்ப்பரந்தவனே! உன் பாத கமலங்களை திருவடிகளை எங்கள் மேல் பதிக்கருள்வாயாக நாங்கள் எட்டிப்பிடித்து தொட்டுவணங்க உன் தாள்களை தந்தருள்வாயாக.

-புலவர்,

வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வும் இருப்பும்

கவிஞர். மு. பொன்னம்பலம்

வாழ்க்கை என்றால் என்ன?
வாழ்க்கை பற்றியபிரக்ஞைஎத்தனை பேருக்குண்டு?

ஒரு குழந்தை பொம்மை ஒன்றை வைத்து விளையாடி விட்டு, சிறிது நேரத்தில் அதைத் தூக்கியெறிந்து விட்டு, துயின்று விடுவது போல், அனேகமாக 'மனிதர்' இப்பூவுலகில் பிறந்து 'வாழ்க்கை' என்ற ஒன்றை வைத்து விளையாடிவிட்டு கண்ணை மூடி விடுகின்றனர் - அதாவது இறந்து போய்விடுகின்றனர்.

பொம்மையோடு விளையாடிய குழந்தைக்கு, பொம்மை பற்றிய எந்த அறிவும் இல்லை. பொம்மையின் நிறங்களாலும் அது ஏற்படுத்திய கவர்ச்சியாலும் ஈர்க்கப்பட்டு குழந்தை சிறிது நேரம் தன்னை மறந்து அதனோடு விளையாடுகிறது. பின்னர் அதனை மறந்து நித்திரையாகி விடுகிறது. அதைப் போலவே அனேக மனிதருககு 'வாழ்க்கை' பற்றி எதுவும், தெரியாது. அது பற்றிய எவ்வித ஆழமான அறிவும் இல்லை. ஆனால் 'வாழ்க்கை' என்னும் நிகழ்வுகளின் தொகுப்பு ஏற்படுத்தும் சிறு சிறு சந்தோஷங்களாலும், துக்கங்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டு 'வாழ்ந்து' இறந்து போகின்றனர். மொத்தத்தில் ஒரு சாதாரண மனிதனின் 'வாழ்க்கை' என்பது, அவன் எந்தவித ஆழமான பிரக்ஞை அற்ற நிலையில், அனுபவித்த சந்தோசம், துக்கம், பீதி, திகில் போன்ற உணர்வுகளின் தொகுப்பே. இதற்குமேல் அவன் வாழ்க்கை பற்றி அறிந்திருந்தவன் அல்ல.

(2)

'நீ எப்போது பிறந்தாய்?' என்றொருவன் கேட்டால் அதற்கு, '26 - 8 - 40 ல்' என்று கேள்வி கேக்கப்பட்டவன் தான் பிறந்த ஆண்டையும் திகதியையும் பதிலாகக் கூறுகிறான்.

'அப்போ உனக்கு 52 வயதாகிறது' என்று கேள்வி கேட்டவன் அவனது வயதைக் கணக்கிட்டுப் பார்க்கிறான்.

ஆனால் பிறப்பென்பது வயது, திகதி என்பவற்றோடு சம்பந்தப்பட்ட ஒன்றா?

ஒருவனது பிறப்பு பற்றிய கால எண்ணிக்கை வேறு லௌகீக காரணங்களுக்கு உதவினாலும், ஒருவனது வாழ்க்கை பற்றிய பிரசஞைக்கு எதுவிதத்திலும் உதவப்போவதில்லை,

உண்மையில் ஒருவன் எப்போது வாழ்க்கை பற்றிய பூரண பிரக்ஞை கொள்கிறானோ, அப்போதே அவன் பிறக்கிறான். அது வரை அவன் காலந்தள்ளிய வாழ்க்கை எல்லாம் அவன பிறவா நாளே!

அப்படியானால் வாழ்க்கை பற்றிய பிரக்ஞை என்பது என்ன? அதுதான் முக்கியம்.

இந்த உலகில் வாழும் அத்தனை ஜீவ கோடியின் வாழ்க்கை என்பது என்ன?

அத்தனை உயிர்களும் வாழ்ந்து கழிக்கும் வாழ்க்கை, எங்கே போய் களஞ்சியப்படுகிறது? அல்லது எங்கே போய் விரையமாகிறது?

கால ஓட்டத்தில், ஒரு மனிதன் அனுபவிக்கும் துக்கம் சந்தோஷம், கோபம், பீதி என்னும் எண்ணிறந்த உணர்வுகளின் தொகுப்புத்தான் வாழ்க்கையா? காலவெள்ளப் பெருக்கில், வண்டல்கள்போல் அள்ளுண்டு மிதந்து வரும் இந்த உணர்வுகளின் அனுபவந்தான் வாழ்க்கையா?

இப்படி காலப்பெருக்கில் மிதந்து விடும். உணர்வுகளை, ஏதோ நம்மைக் கரை சேர்க்கும். 'புணை' என நீரில் மூழ்கும் மனிதன் இறுகப்பிடித்துத் தன்னை ஆசுவாசப் படுத்திக்கொள்வது போலவே அனேக மனிதர்கள் இவ்வுணர்வுகளை வாழ்க்கை என இறுகப் பற்றி ஏமாற்ற முறுகின்றனர்.

மனிதன் 'புணை' எனப்பற்றிப் பிடிக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் அதன் வழிவரும் உணர்வுகளும், உண்மையில் அவனைக் கரை சேர்ப்பனவல்ல. மாறாக அவன் தொட்டதுமே உடைந்து மறைந்துபோகும் காலப் பெருக்கின குமிழிகள். அதை அவன் பின்னரே உணர்கிறான். உணர்ந்தும் அதையே அவன் மீண்டும் மீண்டும் பற்றிப்பிடிக்கிறான். அதையே அவன் வாழ்க்கை என மயங்குகிறான். அதுதான் மாயை.

ஆனால் உண்மையென நம்பும். இவ்வாழ்க்கை நிகழ்வுகள், எவ்வளவு நிலையற்றவை, எப்படி குமிழ்வுற்று உடைகின்றன என்பது பற்றிச் சிந்திப்பவன் வாழ்க்கை பற்றி பிரக்ஞை கொள்கிறான். அப்படிப் பிரக்ஞை கொள்ளும் போதே அவன் முதன் முதலாகப் புவியில் பிறக்கிறான். இவனையே 'துவிஜன்' என ஆன்றோர் அழைக்கின்றனர். அதாவது இரண்டாம் பிறப்புக்குரியவன்.

(3)

இப்படி வாழ்க்கை பற்றி ஆழமான பிரக்ஞை கொள்ளும் ஒருவன், தான் சதா 'அனுபவிக்கும்' சந்தோஷங்களினதும் துக்கங்களினதும் அவை போன்ற ஏனைய உணர்வுகளினதும் ஊற்று மூலம் எது எனச் சிந்திக்கிறான்.

இவனது இந்தச் சிந்தனை, இவன் தான் அனுபவிக்கும். உணர்வுகளின் ஊற்று மூலத்தை, இருப்பிடத்தைக் கண்டடையச் செய்கிறது. 'நான் யார்' 'என்னைச் சூழ்ந்துள்ள பின்னணி' என்ன?! என்பன போன்ற ஆழமான கேள்விகள் மூலம் காலம், இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[stamp]

பொருள் கடந்த முடிவற்ற ஆழமான பிரக்ஞை வெளியாய் தான் இருப்பதை உணர்கிறான் இந்தப் பிரக்ஞை வெளியே இப்பிர பஞ்சத்தின் சகல வற்றினதும். உள்ளீடாய் இருப்பதை உணர்கிறான்.

இநத ஏகப்பிரக்ஞையே சகல வற்றினதும் உள்ளீடாய், இருப்பாய் இருப்பதால் அவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று ஈர்ப்புடையனவாய், ஒரே இன் பொருளின் வார்ப்புகளாய் உள்ளன. ஒன்றை ஒன்று நேசிக்கும் அன்பும் இதலிருந்தே ஆரம்பிக்கிறது.

இப்படி உணர்ந்தவன் மீண்டும் குழந்தை ஆகிறான் ஆனால் இப்பொழுது ஒரு மாற்றம் முன்னர் தான் விளையாடும் பொம்மை பற்றி அறியாத குழந்தை, ஆனால் இப்போ வாழ்க்கையென குமிழ்வுறும் நிகழ்வுகளினதும் அதன் வழிவரும் உணர்வுகளினதும் அர்த்தம் தெரிந்த குழந்தை.

ஏகப் பிரக்ஞையில் குமிழ்வுற்றுடையும் நிகழ்வுகள் அதன் வழிவரும் உணர்வுகள் ஆகியவற்றின் தொகுப்பே இந்த வாழ்க்கை (பொம்மை) என்பதைப் பற்றி நன்கறிந்து விளையாடி மகிழும் குழந்தையே இப்போ அவன்.

---

## சிரிக்கமாட்டோம்

எங்கள்
நாட்டுப் பிரச்சனைகளால்
நாங்கள்
இப்பொழுது
நரசிம்மராவ்கள்

-புலவர்-

---

## எப்படியோ அப்படி!

நீங்கள் எப்படி இருக்கவேண்டுமோ
அப்படி இல்லா விட்டால
நானும் எப்படி இருக்க வேண்டுமோ.
அப்படி இருக்கமுடியாது.
இதுவே யதார்த்தத்தின் ஊடுறவுக்
-கட்டுமானம்.

-மாட்டின்லூதர்கிங்,

---

# நகலாகிப் போன கனாக்கள்

- மேமன்கவி

பிளாஸ்டிக் பூக்களைப் போல்
கனாக்களும் இப்பொழுது
நகல்களாக...............

1/2 நித்திரையில் பிராண்டிய
சதையின் மேல் புறத்தைப் போல்
சிவந்து போன
யுகத்தின் கதையைச்
செப்புகிற கனாக்களிலும்
நகல்கள்

செவி வாசல் அருகே
எந்தவொரு ஒலத்தையும்
உள் வாங் காது
உள் குமையும் மனமே
இன்றின் அவலத்தில்
சோரம் போகும்

அரிக்கும் அந்தரங்கத்தின்
ஊசி முனையே மழுங்கிப் போகும்
சத்தியத்தைப் போல்

கலாசாரத்தின்
இருப்பு சுமைகள்
இமைகளை நசிக்கப் போட-
கனாக்களில்-
குருதியில் குளிக்கும்
'' மனிதர்கள் ''

இருப்பின் சுமைவுடன்
ஜீவனத்தைப்
படிக்கமாக்கிப் போகும்
உள்ளும் - புறமும்

பிளாஸ்டிக் பூக்களைப் போல்
கனாக்களிலும்
ஏமாற்றத்தின் தூசிப்படலம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் கலை இலக்கியமும் காலக்கோலமும்

-நாகேசு தர்மலிங்கம்-

இன்றைய தமிழ் கலை இலக்கிய வளர்ச்சிப் போக்குக்கு வரலாற்று அடிப்படையிலான பாரம்பரியம் இருக்கிறது. இந்தப் பாரம்பரியம் பொதுவாக உலகின் தொன்மையான மொழிகளுக்கே உண்டு. இத்தகைய தொன்மையான மொழிகளின் வரிசையில் தமிழ்மொழியும் ஒன்றாகும். தமிழ்மொழியின் வரலாறு தமிழ் இலக்கியத்தின் வரலாறாகவும் விளங்குகிறது. வரலாறு என்பது ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுகளில் ஆதாரம் காட்டி வெளிப்படுத்திய முடிவுகளாகும். பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக் கழக மாணவர்கள் வரை வரலாற்றை ஒரு பாடமாகப் பயில்பவர்கள் காலத்தை வரிசைப் படுத்தி வரையறுத்து அதைப் பயின்று வருகிறார்கள். பொதுவாக இவர்கள் பயிலும் வரலாறு அரசையும் அவ்வரசு சார்ந்த பிரதேசத்தையும் பற்றியதாகவே இருக்கும். ஆதிகாலத்து முடியாட்சி முதல் இன்றைய குடியாட்சி வரையுமே அந்த வரலாற்றின் கருப்பொருளாகும். உதாரணத்திற்கு இலங்கை வரலாற்றில் கி மு 161ம் வருடப் பகுதியில் உள்ள வரலாற்றை நோக்கினால் அக்காலத்துச் சாதாரண மனிதனைப் பற்றிய தகவலைக் காணமுடியாது. ஆனால் துட்டகெமுனு என்ற மன்னனையும் அவனது அரசையும் அந்த வரலாறு நன்கு விளக்குகிறது. இதே போன்றே உலகப் பண்டைய வரலாறும் மன்னர்களின் வாழ்க்கை வரலாறாகவே படிக்கப்படுகிறது. இதற்குரிய அடிப்படைக் காரணம் என்ன? ஆரர்ய்ச்சியாளர்களின் ஆய்வுக்கு எட்டிய தகவல்கள் இந்தச் சர்வ வல்லமையும் வாய்ந்த மன்னர்களைப் பற்றியதாக இருப்பதேயாகும்

இந்த மன்னர்களை யார் நிர்ணயித்தார்களோ எது எப்படியாயினும் அக்காலச் சமூகப் பழக்க வழக்கங்களையும் கலை, கலாச்சார இலக்கியங்களையும் இந்த மன்னர்களே நிர்ணயித்தார்கள் என்றால் மிகையாகாது. அக்காலக் கலை இலக்கியமும் இந்தக்கலை இலக்கிய காரர்களும் இந்த மன்னர்களால் பேணப் பட்டார்கள்.

தமிழ் இலக்கிய வரலாறு தமிழக அரசியல் வரலாறாகவும் விளங்குகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றை காலவர்த்தமான அடிப்படையில் பிரித்து ஆராய்ந்த இலக்கிய ஆய்வாளர்கள்; ஒவ்வொரு காலத்திலும் தமிழகத்தில் அரசோச்சிய அரசோடும் அவ்வரசின் குலத்தோடும் சேர்த்தே பிரித்துள்ளார்கள் இதற்கு அவ்விலக்கியப் படைப்புக்கள் படம் பிடத்துக் காட்டிய காலக் கருத்துக்களே மூலா தாரம் என்று கூறலாம். சங்ககாலம், சங்க மருவியகாலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர் காலம் என்று இலக்கிய வரலாற்றைப் பிரித்துச்செல்லும் இவ்வாய்வாளர்கள் இங்கேயும் அரசையும் அரசசெல்வாக்கயையுமே ஆதாரமாகக் கொண்டுள்ளார்கள். மதுரையில் சங்கம் அமைதது்த் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்கள் முதல்; பதினெட்டாம் நூற்றாண்டு நாயக்க மன்னர்கள் வரை தமிழ் இலக்கியப் போக்கை; மன்னர்களும் அவர்கள் சார்ந்த அரசும் நிர்ணயித் திருப்பதை இக்கால இலக்கியப் படைப்புக்களைப் படிப்பதன் மூலம் நாம் அறியலாம் பெரும்பாலான அரசர்கள் தங்கள் ஆட்சிக்காலங்களில் புலவர்களை அரவணைத்து இலக்கிய முயற்சியில் ஈடுபடத் தூண்டியதோடு மன்னர்களே புலமை வாய்ந்தவர்களாகவும் விளங்கி பல இலக்கிய ஆக்கங்களையும் செய்து இருக்கிறார்கள்.

பாண்டிய மன்னர்களின் சங்ககால இலக்கியத்திற்கும் பதினொராம் நூற்றாண்டுச் சோழர்கால இலக்கியத்திற்கும் உள்ள வேறு பாடு எல்லோருக்கும் நன்கு புரியும் இதனால் தான் இலக்கியம் காலக் கண்ணாடி என்கிறார்கள், எனினும் இவ்விருமன்னர்களின் செல்வாக்கே; அதாவது அவர்களின் அக்கால சமூககலாச்சாரங்களை நிர்ணயிக்கும் தனித்திறனே இந்த வேறுபாடென்றும் துணிந்து கூறலாம்.

எனவே அரசியல் வரலாற்றோடு தமிழ் இலக்கிய வராலறும் சேர்ந்து பின்னிப் பிணைந்து வளர்ந்திருப்பதையும் அதன் காரண கர்த்தாக்களாக அக்கால மன்னர்கள் விளங்கி இருப்பதையும் எமது ஆய்வாளர்களின் முடிவின்படி நாம் அறியக்கூடியதாக இருக்கிறது.

இருப்பினும் இன்றைய நவீன காலத்தில் இத்தகய பண்புகள் மாறி விடயம் தலைகீழாக இருப்பதை நோக்கியறியலாம். இது உலகில் உள்ள எல்லா நாடுகளையும் விட பெருமளவில் தமிழ் நாட்டில் நடைமுறையில் இருப்பதை யாவரும் அறிவார்கள்.

முடியாட்சி முடிந்து குடியாட்சி தோன்றியகாலத்தில் அதாவது ஜனநாயக அமைப்புஉலகின் பல பாகங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]



களில் வேரூன்றியகாலத்தில் மக்கள் நலன் பேணு கொள்கைகள் கட்சிகளாகி அதுவே ஜனநாயக அரசை நிர்ணயித்தன. இவ்வாறு தோன்றிய அரசுகள் தனக்குச் சார்பான கலை இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவளித்து. மறைமுகமாக அவற்றை நிர்ணயிப்பனவாகவும் விளங்கின:

தமிழகம் இந்த விடயத்தில் தலை கீழான போக்குடையதாகவே விளங்குகிறது. தமிழகத்தில் தேசிய ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் பல அரசியற் கட்சிகள் தோன்றிய போதிலும் இவைகளின் கொள்கைப் பிரச்சாரம் இலகுவில் மக்களைக் கவரும் சக்தி என்பனவற்றை தமிழ்க்கலை இலக்கிய வடிவங்களே செய்திருக்கின்றன.

தேசியக் காங்கிரஸ், திராவிடக்கழகம், திராவிடர் முன்னேற்றக்கழகம், மாக்சிஸ்ட்கட்சிகள என்பன இந்தத் தமிழ் இலக்கிய வடிவங்களைப்பயன்படுத்தி ஆட்சிக்கட்டி லேறியிருக்கின்றன. இவைகளில பிராந்திய வாதத்தை முன்வைத்த திராவிடக் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பன தமிழை இலகு படுத்தி அழகு படுத்தி படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை விளங்கும் விதத்தில் கதையாகக், கட்டுரையாக நாடகமாக, சினிமாவாக கலை - இலக்கிய வடிவங்களை மக்கள் மத்தியில் பரப்பி; அவர்களின் செல்வாக்கைப் பெற்று; தமிழகத்தின ஆட்சியைப்பிடித்தபடி இன்னும் இளகவில்லை. இவற்றை நோக்கும் பொழுது இந்தக்கலைபிலக்கியங்களே தமிழக அரசை நிர்ணயிககிறது என்றால் மிகையாகாது. திராவிடக்கழகம் கடவுள் கொள்கையில் மக்களைத் தொடத்தவறியதை உணர்ந்த திராவிட முன்னேற்றக்கழகம் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று அடித்துக்கூறி தமிழக அரசினைக் கைப் பற்றியது.

இக் காலமே தமிழ்க் கலை - இலக்கியத்தின் திருப்பு முனை என்று ஆய்வாளர்கள் கூறுவார்கள் இன்றைய தமிழ்க் கலை இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்கிற்கு இவ்வியக்கத்தினரே ஆதர்சமாக விளங்குகிறார்கள் என்றால் மறுப்பதற்கு யாருமில்லை. அறிஞர் அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் தமிழகத்தின் முதலமைச்சர்களாக விளங்கிய போதிலும் பண்பட்ட கலைஞர்களாகப் பரிணமித்து உலகத் தமிழினத்தின் தலைவர்களாக விளங்கியதோடு இது தான தமிழ் இலக்கியம் என்று உலக அரங்கில் துணிந்து தூக்கிப்போடக்கூடிய இலக்கிய - கலை ஆக்கங்களைத்தந்திருக்கிறார்கள்.

இவர்கள் அச்சுவாகனம் ஏறும் பத்திரிகைகள், நூல்கள் என்பவற்றைத் தங்கள் சாதனமாக ஆரம்பத்தில் பயன்படுத்தி அக்காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று வந்த தமிழ் சினிமாவையும் தங்கள் வசமாக்கி தமிழக அரசை நிர்ணயிக்கும் சாதனமாகப்பயன்படுத்தினார்கள்.

திராவிடர் முன்னேற்றக்கழகத்தவர்கள் திரைக்குப் பின்னாலும்; திரையிலும் நின்று புரிந்த சாதனைகளே தமிழக ஆட்சிக்கட்டிலை இப்பிராந்தியக் கட்சிகள் நிரந்தரமாகப்பிடித்துள்ளமைக்கான முக்கிய காரணங்கள் என்று கூறலாம்.

இந்தச் சினிமா வளர்ச்சியும் அதில் தோன்றி நடித்த நட்சத்திரங்களின் திராவிட முன்னேற்றக் கழகம் சார்ந்த தனிப்பட்ட வளர்ச்சியும் கவர்ச்சியாக மக்கள் மத்தியில் பரவத் தொடங்கி; முன்னையவர்கள் மறக்கப்பட்டு; திரையில் தோன்றியவர்கள் மதிக்கப்பட்டு போற்றப்பட்டார்கள், இதனால் முதலமைச்சர் கதிரையில் யார் அமர்வது என்பதை சினிமா நிர்ணயிப்பதாயிற்று. இந்த சினிமாவின் துணை கொண்டு எம். ஜி. ஆர். தமிழகத்தின் முதலமைச்சரானார். இவரைத் தொடர்ந்து அவருடன் பல படங்களில் ஜோடியாக இணைந்து நடித்த நடிகை செல்வி. ஜெயலலிதா தற்போது முதலமைச்சராக விளங்கி வருகிறார். இவரைத் தொடர்ந்து தமிழகத்தின் முதலமைச்சருக்கான அரியாசனம் எந்த நடிகருக்காகவோ அல்லது, எந்த நடிகைக்காகவோ காத்திருக்கிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ஏனெனில் தமிழகத்தின் தலையெழுத்தை நிர்ணயிப்பது தமிழ்ச்சினிமாவாகும்!

## சிரிப்போம்

சொல் ஒன்று சொல்லி
செயல் ஒன்று செய்யும்
சிந்தனை மனிதனை கண்டால்
கை கொட்டிச் சிரிக்க
காலம் போதாமையால்
கண்கொட்டிச்
சிரிப்போம்.

புலவர்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தரிசனம்

சட்டநாதன்

மெலிதாக விலகியிருந்த கதவின் நீக்கலில் அவள் இருப்பது இவனுக்குத் தெரிந்தது.

அவளது கைகளில் ஏதோ புத்தகம். 'இவளுக்கு இந்தப் பித்து இன்னும் தீர்ந்தபாடு இல்லையோ? என நினைத்தவன் - கதவை நெருங்கி, மெதுவாகத் தட்டினான்.

மிகவும் ஆழ்ந்து படித்துக்கொண்டிருந்ததால், அந்த ஓசை அவளிடம் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

கதவு மிக அருகாமையிலிருந்தும், தன்பால் அவள் கவனம் கொள்ளாதது இவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

'இவள் முன்னைக்கு இப்பொழுது பருத்திருக்கிறாள். பூசியதுபோலிருந்த தசைகளில் ஒரு இறுக்கம், சேர்ந்தாற்போல ஒரு தளர்ச்சியும் கண்டிருக்கிறது'- என நினைத்தவன், நெற்றிக்கு மேலாக அவளது கூந்தலில் சற்று நரையோடி இருப்பதையும் அவதானித்தான்.

'உட்காரும்படி கூடச் சொல்லாமல் இதென்ன பார்வை..!' நிதானம்

அவனது மனசு அலுத்துக் கொள்கிறது.

,'இல்லை... ஏழுவருஷங்களுக்குப் பிறகு... என்ன இப்படித் திடீரென இந்தப்பக்கம்?''

''உன்னை ..இல்லை...இல்லை...மலரையும் பார்க்கவேணும் போல ஆசையா இருந்தது...''

''உண்மையா......? என்னையும் மலரையும் பார்க்கவா வந்தது?''

'இவளது குரலில் இழைவது கோபமா... ஏளனமா? இவள் மாறவில்லை...... இத்தனை ஆண்டுகள் இடைவெளியின் பின் கூட, இவளில் எதுவித மாற்றமுமில்லை...''

பெண்மை மென்மையும் குழந்தைக் குழைவும் சட்டநாதனின் சிறு கதைகளில் இழையோடி இருக்கும், தமிழில் நெகிழ்ச்சித் தன்மையை வெளிக்காட்டும் சிருஷ்டியை இவருடைய ஆக்கங்களில் காணலாம். மேலைநாடுகளில் சிறுகதை முயற்சியை ஒரு வேலை என்பார்கள் We Work On Short Story என்பர். சட்டநாதன் தனது சிருஷ்டி வேலையால் சிறுகதையை செழுமைப் படுத்துபவர் என்று கூறலாம்.

- பேராசிரியர். கா. சிவத்தம்பி.

எதையுமே தீர்மானத்துடன் ஒதுக்கிவிடும் அவளது இயல்பு அவனுக்கு நினைவுவர, சற்றுப் பலமாகத் தட்டினான்.

அவள் விழி உயர்த்தி, சிறிதாகத் திரும்பி, இவனைப் பார்த்தாள். பார்த்தவள். எழுந்து வந்து கதவைத்திறந்து, இவன் உள்ளேவர வழி தந்து நின்றாள்.

உள்ளே வந்தவனை அவள் நன்றாகவே பார்த்தாள். 'ஒரு ஆணுக்குரிய மனப்பக்குவங்களை இவன் கொண்டிருக்கவில்லை. எனினும், கம்பீரமாக இருந்தவன்... ஏன்...? ஏன் இப்படி உடலும் மனமும் சவலை தட்ட, அழுக்குப்படிந்த உடைகளுடனும், பல நாட்கள் முகச்சவரம் செய்யாமலே முரட்டுத்தனமாய் வளர்ந்து அடர்த்தி கொண்டதாடியுடனும்... ஓ! அந்தக் கண்கள்...! வைரமணிகளாய் ஒளிரும் அந்தக்கண்கள்! தீட்சண்யம் குன்றி... ஒளியிழந்து...'

அவள் இவனைப் பார்த்தபடியும்; இவன் அவளைப்பார்த்தபடியும் ஒரு சில நிமிடங்கள் மௌனத்தில் கரைந்தன.

'இருங்களன்...'

அவளது அந்த வார்த்தைகளையே எதிர்பார்த்தவன் போல, உடனடியாக உட்கார்ந்து கொண்டவன் -அவள் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை எட்டி எடுத்துப் புரட்டினான். சிரமத்துடன் அதன் தலைப்பை மனப்பாடம் செய்வது போலச் சற்று உரக்கவே படித்தான்.

'டப்பிளினேர்ஸ்''

'என்ன ஜேம்ஸ் ஜொய்ஸ்ஸா...? பிரஞ்சா...ரஸ்ஸியனா? என்ன நாவல்...? அவள் முகத்தைச் சற்றுக் கைகளால் மறைத்தபடி, மெலிதாக நகைத்தாள். அவனது அறியாமை, அவன் அறிந்த ஒன்றுதான். 'எழுத்து, இலக்கியம் பற்றி எதுவித அறிவோ ரசனையோ இல்லாது, யந்திரம் போல வாழ்ந்தவன் தானே இவன், என நினைவு கொண்டவள்; அவனுடன் ஓர் இரண்டாண்டு காலம் வாழ்ந்த அந்த அவலம் மிகுந்த வாழ்வை நினைவு கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவள் அவனைத் திருமணம் செய்த பொழுது இவளுக்கு பதினாறு அல்லது பதினேழு வயது தான் இருக்கும். அந்த இளம் வயதிலேயே இவள் விடலைப் பருவப் பெண்களிற்கேயுரிய கனவுகளிலிருந்து விடுபட்டவளாகவும், அதற்கு மாறாக வாழ்க்கை பற்றிய தரிசனம் மிக்கவளாயுமிருந்தாள்.

இதற்கெல்லாம் காரணமாய் இருந்தவரே இவளது தந்தை தான். அவர் கற்றுத் தந்தவை போக அவர் வீட்டில் சேமித்து வைத்திருந்த புத்தகச் செல்வங்கள் இவளை மிகுதியும் ஞானமுடையவளாக்கியது.

அவள் அப்பாவின் புத்தக ஷெல்பிலிருந்துதான் பாரதியையும், புதுமைப்பித்தனையும், மௌனியையும், ஜானகிராமனையும் பரிச்சயம் செய்து கொண்டாள். படிப்பது, அதையொட்டிய ரசனையில் திளைப்பது அவளது வாழ்க்கையின் இன்னொரு பகுதியாக ஆகியிருந்தது.

திருமணநாளன்று இரவு கட்டிலுக்கு இவள் பாலும் பழமும் ஏந்தி அவன் சினிமாவில் பார்த்து ரசித்தமாதிரி கனவுகளோடு வராமல் சாதாரண ''நைட்டி'' யுடன் ஏதோ புத்தகமொன்றைக்கையில் ஏந்திவந்தது, இவனுக்கு மிகுந்த எரிச்சலைத் தந்தது.

'' என்ன இது கையிலை..?''

'' வேள்வித்தீ நல்ல நாவல் படிக்கிறியளா ?''

இவன், அவள் எதிர்பார்க்காதவகையில் - இங்கிதமில்லாமல் சற்று முரட்டுத்தனமாக - அந்தப் புத்தகத்தைப் பிடுங்கித் தூர வீசிவிட்டு, இவளை அணைத்துக் கொண்டான்.

''டாம் இ...'' என்று மெதுவாக முனகியவள், அடுத்த கணம் தன் தவறை உணர்ந்து, நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

அன்று அவள் வேள்வித் தீ படிக்கவில்லை. மலரிலும் மெல்லிய விஷயங்கள் அங்கு தீ படர்ந்து கருகியதான உணர்வினைத்தான் அவளுக்குத் தந்தது.

அந்த முதல் அனுபவம் அவளுக்கு இன்னொரு விஷயத்தையும் உணர்த்தியது. அவனுக்குப் புத்தகமென்றாலே மிகுதியான அலர்ஜி என்பதுதான் அது. அதன் பின், இவள் அவனில்லாத சந்தர்ப்பங்களில் தான் மிகுந்த ரகசியமாகவும், ஒருவகைப் பதட்டத்துடனும் புத்தகங்களைப் புரட்டுவாள்.

அவன் ஒருவகை அதிகாரத்துடனேயே, இவள் படிப்பதை நாகரிகமில்லாமல் தடுத்து வந்தான் அத்துடன் புத்தகம் படிப்பதே பழுதான ரசனை என்றும் அதற்கு செலவிடும் நேரத்தையும் பணத்தையும் ஏதாவது பயனுள்ள வேலையில் ஈடுபட்டுச் செலவிடலாமே என்றும் அவன் அபத்தமாக வாதிடவும் செய்தான்.

அவன் பயனுள்ள வேலை என்று கூறுவதெல்லாம் இவள் அவனுக்கு விதம் விதமாய்ச் சமைத்துப் போடுவதையும், அவனது ஆடைகளைக் கழுவிப் போடுவதையும், அவன் அழைத்துச் செல்லும் மூன்றாந்தர சினிமாக்களையும், நாடகங்களையும் பார்த்துவிட்டு 'நன்று நன்று' என்று அவனது மலினமான ரசனைக்கு ஒத்தடம் கொடுப்பதையும். அதற்கு மேலாக அவன் சொல்லுகிற மாதிரியெல்லாம் இவள் அரைகுறை ஆடைகளோடோ அல்லது ஆடையில்லாமலோ இரவு பூராவுமே சில சமயங்களில் பகலிலும் கூட இவனுடன உறவு கொள்வதைத் தான்; என்பதை இவள் பூரணமாக உணர்ந்திருநதாள்.

''என்ன ஏதேன் குடிக்கிறியளா? கோப்பி தரட்டுமா..?'' என்று கேட்டவள், உள்ளே சென்று, அதிக கோப்பித்தூள் போடாமல்; ஆடை நீக்கிய பால் கொஞ்சம் சேர்த்து, சிறிது சீனியும் சேர்த்து இவன் விரும்பிய வண்ணம் இவனுடன் மனைவியாக ஓர் இரண்டாண்டு காலம் வாழ்ந்த வாழ்க்கையை நினைவு கூர்வதுபோல கோப்பி போட்டுத் தந்தாள். அதை வாங்கிக் கொண்டவன், கிளாசையும் கோப்பியையும் மாறி மாறிப் பார்த்தான்:

''என்ரை கிளாஸ்.. ஏழாண்டுக்குப் பிறகும் உடையாமல் பத்திரமாக ...!!

''உங்களைப்போல என்னாலை எதையுமே போட்டு உடைக்கத் தெரியாது''

அவள் கண்களில் திரட்சி கொண்ட நீரை மெதுவாக முகம் சாய்த்து மறைத்துக் கொண்டாள்.

''கோப்பி கூட இண்டைக்குத் தான் குடிச்சது போலையிருக்கு' என்றவன் திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவனாய் கேட்டான்:

''இப்பை நகுலேஸ் இஞ்சை இல்லையா ...?''

அவன் ஏற்கெனவே கேள்விப்பட்ட விஷயம் தான். ஆனாலும் ஏனோ அதனை உறுதி செய்து கொள்ளவேண்டும்போலிருந்தது அவனுக்கு,

'' இல்லை ... ''

அந்த வாழ்க்கை, தான் விரும்பாமலேயே சம்பவித்ததற்கு அவள் துயருற்றவள் போல, மனக்கலக்கத்துடன் இவனைப் பார்த்து நின்றாள்.

திருமணமான புதிதில் ஒரு சமயம் இவள் அவனுடன் கொழும்புக்குப் போன பொழுது சர்வதேச திரைபடவிழா ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீகல் திரையரங்கில் நடப்பதை அறிந்து இவனை வரும்படி அழைத்தாள். அதில் ஓரிரு படங்களை யாவது பார்த்து விட வேண்டுமென்ற ஆவல் மிகக் கொண்டிருந்தாள் நல்ல திரைப் படங்கள் பற்றி அவள் படித்திருந்த அளவுக்குப் பார்க்கும் சந்தர்ப்பம் அதிகம் பெற்றிருக்க வில்லை.

அவள் பார்த்த கலைத்தரம் வாய்ந்த முதல் திரைப்படம் ரேயின் 'அபுசன்சார்' தான். அந்தப்படம் தோற்ற வைத்த உணர்வின் திருப்தியோடு வெளியே வந்தவளை இவன் மிகவும் மோசமான மொழி புரியாத படத்திற்குத் தன்னை அழைத்து வந்தது பற்றியும், அவளது ரசனை மிகவும் மட்டமானது என்ற தொனிப்படவும் சொல்லிப்போடு அமையாது, ஓர் அமெரிக்கப் படத்தின் பெயரைச்சற்றுத் தவறுதலாக உச்சரித்தபடி—அதைப் பார்த்திருக்கலாம் என்று சொன்னான்.

இவள் உண்மையில் அவன்பால் மிகுந்த பரிவுகொண்டு நல்லது எது என்று புரிந்துகொள்ள முயற்சியுங்கள் என்றாள்.

இது அவனுக்கு எரிச்சலூட்டியிருக்க வேணடும். அவன் கோவமடைந்தவனாய்;

'பெரிய இவ... அவவின்ரை ரசனையும் மண்ணாங்கட்டியும். இப்படி அட்டை ஊர்ர மாதிரிப் படமெடுக்க எவனுக்குத் தெரியாது. சரியான டல்லா...ஒரு பாட்டு...ஒருடான்ஸ் எதுவுமே இல்லாமல்,

அவர்களது உரையாடல் தடைபடும்வண்ணம்.

''ஹலோ... குரு .. என்ன இந்தப்பக்கம், சிவாஜிபடம் எதுவுமே புதிசா ஓடெல்லையா?

''இல்லை மச்சான்... இவன் ஏதோ சொல்லிறாளென்டு வந்த ... ஒரே அறுவைப்படமாப் பாச்சு''.

அவன் மனைவிமீது குற்றம் சுமத்தினான்.

''உன்ரை மிஸ்ஸிஸா.. வணக்கம்''.. என்றவன் தொடர்ந்து கேட்டான்.

''உங்களுக்குக் கலைப்படங்களென்டா பிடிக்குமா?''

இவள் மெலிதாகப் புன்னகைத்தவாறு பிடிக்குமென்றாள்.

''நேற்றைய படம் பார்த்தீர்களா?''

''யப்பானியபடம்... அக்கிராகுரோஸோவாவுடையது... அதுதானே?''

''டைரக்ட்டர் பேரெல்லாம் தெரியுதே''!

''இல்லை ... அவரைப் பற்றிப் படித்திருக்கிறேன் ... அது தான் நான் பார்த்த முதல் படம்''!

அவள் மறைக்காமல் உண்மை பேசியது அவனுக்குப் பிடித்திருந்தது.

''நாளை ஐசன்ஸ்ரைனுடையது தவறாமல் வந்துபாருங்க...'தஸ்ரைக்' என்ற படம்''.

கூறியவன் திடீரென விடை பெற்றுக்கொண்டு வெளியே போனான்.

அவளுக்கு இவனை விட்டுவிட்டு அவனோடு போய், நாளை அவனுடன் வந்து 'த ஸ்ரைக்' படம் பார்க்க வேண்டும்போலிருந்தது.

மறுநாள், அவள் விருப்பங்கொணடிருந்த பொழுதும் 'த ஸ்ரைக்' பார்க்க முடியாமலே போய்விட்டது. இந்த நிலமை மிகவும் கொடுமையானதாகவே அவளுக்குப்பட்டது. தனது சுதந்திரமின்மையும். தான் விரும்பும் எதையுமே செய்யமுடியாமல் போவதையும் நினைத்து மிகவும் கவலையும், கலக்கமும் கொண்டாள்.

அந்த நிகழ்ச்சியின் பின்னர் இரணடுநாள்கழித்து ''குரு இருக்கிறானா''? என்று கேட்டபடி நகுலேஸ்வரன் வந்தான்.

வந்ததுமே 'த ஸ்ரைக்' பார்த்தீர்களா?' என்று தான் கேட்டான். இவளுக்குப் பெருமைக்காகவேனும் பொய் சொல்லவராது. 'இல்லை' என்றாள்.

''சோ .. யூஹாவ் மிஸ்ட் ஏ கிரேட் ஃபில்ம்.' என்றவன் 'குரு எங்கே' என்று மீண்டும் கேட்டபோதுதான் இவள் தன்னுணர்வடைந்தாள்.

தன்னை மறந்து, லயித்துப் போக இவனில் அப்படி என்ன இருக்கிறது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

உயரமாக, சிவப்பாக, பொசு பொசுவென்று தாடி வளர்த்துக்கொண்டு இடை இடையே தன்னிச்சையாகச்சிரித்தபடி, தலை கொள்ளாது சடைத்து வளர்ந்ததலைமுடியை நெற்றியில் வந்து விழும் பொழுதெல்லாம் புறங்கையால் ஒதுக்கியபடி, இவளது உயரத்திற்கே குனிந்து வந்து அவன் இலக்கியம் பேசியது இவளுக்குப் பிடித்து போய்விட்டது.

அவன் கணவனுடைய நண்பன் என்ற ஸ்தானத்திலிருந்து இவளது நெருங்கிய சிநேகத்திற்கு உரியவனானது இவள் உணராமலேயே நடைபெற்றது.

நவீனமான எந்த விஷயத்தையுமே அவன் தெரிந்து வைத்திருந்தான். கலை இலக்கியம் பற்றி ஆழ்ந்து அக்கறையுடன் பேசியவன் அரசியலும் பேசினான். இலங்கையின் இனச்சிக்கல் பற்றியும், அதற்குத்தீர்வாக எதனையுமே தரத்தயங்கும்நமது பூர்ஷ்வா தலைமை பற்றியும் அதன போலிநியாயங்கள் பற்றியும் இவளுக்குப் புரிகிறமாதிரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் ஒப்பி ஏற்கும் விதமாயும் அவனால் பேச முடிந்தது அதே சமயம் பிரஞ் திரைப்படங்களை பற்றிப் பேசும்பொழுது - பத்மா சுப்பிரமணியக்கதையும், வேஷ கோபாலனையும் அவன் தெரிந்து வைத்திருப்பது, இவளுக்கு மிக வும் பிடித்தமாய் இருந்தது.

இதுவரை ஏதோ கரடுமுர டானபாதையில் நடந்து வந்தது போலவும் இவனது வருகையும் தோழமையையும் வெல்வெட்டு விரிப்பில் நடப்பதுபோன்ற சிலி ர்ப்பையே அவளுக்குத் தந்தது.

ஞான சூனியமான எதற் குமே சிடுசிடுக்கும் இங்கிதமில் லாத கணவனது உறவுகளிலும் பார்க்க இந்த உறவு, இந்தத் தொடர்பு எல்லாம் அவளுக்கு பிடித்த மானதாகவே இருந்தது.

ஆனால் அந்த வாழ்வையே கொச்சைப்படுத்துவது போல அ வளது கணவனே இவளை இடித் துரைத்தபொழுது இவள் மிகுந்த கூச்சமடைந்தாள்

இவளுக்கும் நகுலேசுக்கும் தொடுப்பாம்.

'என் கண்முன்னாலேயே இப்படிக் கூத்தடிக்க உனக்கு வெக்கமாயில்லை?' ஏதேதோ அவன் பிதற்றினான்.

அவள் அப்போது இரண்டு மாதக் கர்ப்பமாயிருந்தாள்.

'ஏன் அவசரப்படுவான் நிச் சயமானதும் சொல்லலாமே, என இருந்தவளுக்கு இந்தப் பேச்சுக் குப் பின் ' இவனிடம் போய் இதையெல்லாமா சொல்லவேணு ம்...? என்று ஒரு வகை வீம்பு மேலிட, பேசாமலே இருந்தாள்.

ஆனால், அவளில் ஏற்பட்ட மாற்றங்களை இவனாகவே அறிந் த பொழுது, மிகுந்த சந்தேகம் கொண்டு, 'லபோ லபோ' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டான். நகுலேசின் கரு வைத்தான் ,சோரம்போய் இவள் சுமந்து திரிகிறாள் என்று, சத்தம் வைத்தான்.

அதனோடு அமையாது, நகுலேஸ் ஒரு சமயம் வந்த பொ ழுது. அவனை வாசற்படியிலேயே நிறுத்தி வைத்து, '' நண்பனது மனைவியை பெண்டாளமனசு வருமோ......? '' என்று கூச்சலிட் டான்.

எல்லாமே, மிகவும் கோமா ளித்தனமாகவும், நாடகத் தன்மை மிக்கதாகவும், ஒரு மூன் றாந்தர சினிமாவில் வரும் அரு வருப்பு மிக்க காட்சி போலவுமே அவளுக்குத் தோன்றியது.

இந்தச்சினிமாக் தனமெல் லாம் இவனில் ஊறிப் போன தற்குக்காரணமுண்டென்பது இவ ளுக்குத் தெரியும். 'இவன் வாழ் வின், மதிப்புகளைச் சினிமா வைக் கொண்டே அளவிடுபவன் தானே, என நினைவு கொண் டவள் இந்த அசட்டுப் பிறவியு டன் வாழ்வதிலும் பார்க்க, தனித்தே இருந்துவிட ஆசை கொண்டாள். ஒரு சந்தர்ப்பத் தில் இவள் அவனிடம்:

'' உங்களது சந்தேகங்க ளுக்கு எதுவித ஆதாரமும் இல் லை... உங்களுக்கு என்னிலை விருப்பமில்லையெண்டால்தாரா ளமாகப் பிரிந்து போகலாம்'' என்றாள்.

'' போகத்தான் போ றன்... உன்னோடை... உந்த ஊத்தை... எனக்கு என்ன வேலை... என்றவன், மலர் பிறக் கும் வரை அங்கேயே தங்கிவிட் டது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

குழந்தைஇவனது சாயலைக் கொண்டு பிறந்தது இவனது எதிர் பார்ப்புக்களை மோசம் செய்தி ருக்கவேண்டும்.குழந்தை பிறப் பதற்கே காத்திருந்தவன் போல- தனது சாயலைக் கொண்டிருந் தும், சிறுசிறு சந்தேகம் இவனைக் குடைய- இவன் மிகுந்த குரோ தம் கொண்டு, பெற்றவள், பச்சை உடம்புக்காரி என்று கூடப்பார்க்காமல்,- அவளை மிகக் கொடூரமான முறையில் உதைத்தான்.

'' குழந்தையின் கண்கள் நகுலேசின்ரை மாதிரியே இருக்கு இடது உதட்டோரத் திலை இருக்கிற அந்தமச்சம், அது கூட அசலாஅவன்ரை மாதி ரியே.. '' என்று கூறி அவளையும் குழந்தையையும் விட்டுப் பிரிந்த பின்னர் காலம் தாழ்த்தி இப்பொ ழுது வந்திருப்பது;

'மலரைப்பார்க்கவா...? இல்லை... மனமே மரத்துப் போய் ஒதுக்கிவிட்ட விஷயங் களை தொட்டுக்காட்டி... சுகந் தேட வந்திருப்பானோ...?'

அதை நினைத்ததும் அவளா ல் தாளமுடியவில்லை, சிரிப் பாய் வந்தது. அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்.

என்ன.. என்ன... ஏன் இப்ப டிச் சிரிக்கிறை?''

'இல்லை... மலர் உங்கடை பெண் என்பதை நிச்சயபடுத்தி யாச்சுப்போல... அதுக்கு, உங் களுக்கு ஏழுவருஷம் பிடிச்சிரு க்கு...'

'ஏன்...ஏன் அப்பிடிச்சொல் லிறை?'

'அந்தச் சந்தேகம்தானே நம்மைப்பிரிச்சி வச்சது... அது கூட ஒருவகையிலை நல்லதாய்ப் போச்சி... கனவுகள் கலைய இப் படி ஒரு சந்தர்ப்பம் கிடைப்பது நல்லது தான்'

'நான் கனவிலை நினைக் காத ஒரு வாழ்வை நீங்கள் கற் பிதம் செய்து... என்னை விட்டுப் பிரிந்த பின்பு... கற்பிதமானதே நிதர்சனமாகி விடுவது எவ்வளவு துயரம் தருகிற' விஷயம்.

'என்ன... துயரமா நீ நகு லேசோடை சந்தோஷமாக இருக் கேல்லையா?

'எதற்குமே ஆணில் சார்ந்தி ருக்கும் பெண்ணுக்கு... மகிழ்ச்சி சந்தோஷமென்பதெல்லாம் கை கூடுமா? உங்களைப்பிரிந்த பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு வயிறு ஆருந்தம்த... மலர், அந்தப் பிஞ்சு... துடிததருக்க எனனாலல பொறுத் திருக்க ஆகுமா? சரியோ தப்பா, நீங் களதான் எனது முதல காசுமபம் பாதுகாப்பு. வாழ்க்கை, கன்னி கழித்த உத்தமர். தெய்வம்'

குரலில் ஏளனம் இழைய, அவள் தொடர்ந்தாள்.

'ஏதோ மிடுக்கிலை... தவ றான புரிதலுடன் செனறுவிட்ட உங்களை என்னாலை தடுதது நிறுத்த முடியேல்லை. இதோ, இப்பொழு ... காலம் கடந்து எனக்குக் கிடைததிருக்கும ஆந்த வாத்தி உத்தியோகம், அப்பொ ழுது இருந்திருநதால நகுலேசு என்ற பொய்மை எனது வாழ் விலை குறுக்கிடாமலே இருந்தி ருக்கும்'

பொய்மையா? என்ன..?என் னாலை நம்ப முடியேல்லை...''

''எனக்குப் பசித்தது. மல ருக்கும் பசித்தது இலக்கியம் அது இதெல்லாம் இரணடாம் பட்ச மாப் போன பொழுது தான... நகுலேஸ் திரும்பவும் எனது வாழ் விலை குறுக்கிட்டான் அப்பொ ழுது அவன் தனியார் கம்பெனி ஒன்றிலை விளம்பரப்பகுதி முகா மையாளராக வேறு இருந்தான் கை நிறையச் சம்பளம் வாங்கி னான். தனித்திருந்தவளுக்கு அவ னது துணை வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் பொருளாதாரக் காரணங்கள் தான் வயிறு. குளிர்ந்தது. மீண்டும் இலக்கியப் பேச்சு, கலை திரைப்படங்கள், மதுரை சோமுவின் கச்சேரி, பாலேந்திராவின் நாடகங்கள். ரி. வி. யில் லெஸ்ட்டரின் படங் கள் இந்தச் சுக களுக்கெல்லாம் துணையாய் இருந்தவன் தனது சுகத்தையும் நினைத்து என்னைத் தொட்டபொழுது. வருத்தத்து டன் உங்களைத்தான் நினைத் துக் கொண்டேன். அன்று கை யையும் காலையும் ஒருவித அபி நயத்துடன் ஆட்டிக்கொண்டு 'நண்பன் மனைவியைப் பெண் டாளலாமோ?' என்று குதித்த வர் இதைப் பார்ப்பதற்கு இல் லையே என்று'

மிகுநத சிரத்தையுடன் அவள் சொல்லிவர இவனோ எது வித சலனமும் அற்றவனாய், உப கதை கேட்கும் தோரணையுடன் இருந்தது. அவளுக்கு அதர்ச்சி யாக இருந்தது.

''என்னைத் தொட்ட நாளி லை இருந்து நகுலேசுக்கும் புத்தி மாறிப்போச்சு. உங்களைப் போலத் தான அவனும் தனது மீசை முளைத்த தனத்தை பறை கொட்டத் துவங்கினான். நளி னம, நாகரிகம் எல்லாமே முக மூடிதான். திரைகிழிய, அவனது சொரூபம் தெரிந்தது. இந்த வாத்தி உத்தியோகம் போன வரு ஷம் தான் எனக்குக் கிடைச்சது இது கிடைக்கிற வரைக்கும் அவன் ஆண். நான் பெண். அவன் உழைத்துப் போடிறவன்; நான் எதிர்பாாத்திருப்பவள். நான் அவன் சொற்படி நடக்க வேண் டாயோ?''

மனதில் கனன்று கொண்டி ருந்த அனைத்தையுமே கொட்டி விட்ட திருப்தியுடன், அவள் அவனைப் பார்த்தாள்.

அவனோ அசிரத்தையாக எதிலோ கவனங்கொண்டதான பாவனையுடன் இவளைக் கேட் டான்:

''மலர் எங்கே...?''

''சினிமாவுக்குப் போயிருக் கிறாள்...''

''சினிமாவுக்கோ? குழந்தை யைத் தனியாகவா விட்டனி.?'

''அடேயப்பா, மகளிலை அக்கறை பரவாயில்லையே''

'' ........ ........''

அவனது மௌனம் இவளைக் காயப்படுத்தி இருக்க வேண்டும். அவள் அமைதியாகச் சொன் னாள்;

பக்கத்து வீட்டுப் புஷ்பத் தோட போனவள், இப்ப வந்திடு வாள். அது சரி, வந்தது தான் வந்ததையா...சாப்பிட்டுவிட்டு ... அவளையும் பார்த்திட்டுப்போக லாம்!'

அவன் எதிர்பார்க்காத உப சரிப்பு.

'இந்தாங்க இந்த அல்பத் தைப்' பாருங்க...' என்று தனது -அவனுடன் வாழ்ந்த வாழ்க்கைக் குப் பின்னான - ஓர் ஏழு ஆண்டு கால வாழ்க்கையைச் சொல்லக் கூடிய 'அல்பத்தை' இவன்கை யில் தந்து குசினிப்பக்கம் போனாள்.

இவனுக்கு முருங்கைக்காய்க் கறியெனறால அதிக விருப்ப மென்று நினைததவள், அந்த இரவு நேரத்தையே பொருட் படுத்தாமல இரணடுகாய் ஆய் ந்து நல்ல சொட்டுப்பாலில் கூட் டுக்கறி வைத்தாள். முட்டை அவித்தாள். பால்சொதியும் வைத்துவிட்டு, இவனைக் கூட டத்தில என்ன செய்கிறான் என எட்டிப்பார்த்தாள்.

அவன் தூங்கிவழிந்துகொண் டிருந்தான. பிரயாண அசதியாக இருக்கலாம் என நினைத்தவள் உள்ளே வந்து இடியப்பம் அவித் தாள்.

இவள் இடியப்பம் அவித்த பொழுது, 'அம்மா' என்றபடி மலரும் ஓடிவந்தாள்.

புஷ்பம் கேற்றடியில் நின்றே விடைபெற்றுக் கொண்டாள். இவன் வந்திருப்பது பற்றி ஏனோ புஷ்பத்திற்குச் சொல்ல வேண் டும் என்று இவளுக்குத் தோன்ற வில்லை.

கூடத்திற்குள் காலடி எடு த்து வைத்த மலர் - அந்நியன் ஒருவன் இருப்பதைக்கண்டு - ஒரு சமயம் தடுமாறி, பின் தாயாரின் கால்களை ஓடி வந்து அணைத் தப்படி நின்றாள். அவளது பார்வை தடுமாறுவதைக்கண்டு இவள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உன்ரை அப்பா...' என்றாள்.

''அப்பாவோ? ''மலரால் அதை நம்ப முடியவில்லை, அவளது விழிகள் அதைத்தான் உணர்த்தின.

மலரையே வைத்தகண் வாங்காது வாஞ்சையுடன் பார்த்தபடி இருந்தவனை

'' சாப்பிடலாமா? '' என அழைத்தாள்.

சாப்பாடு, டைனிங் டேபிளில் ரெடியாக இருந்தது.

அவனுக்குப் பரிமாறியபடியே அவனைப் பார்த்தவளுக்கு, ஏனோ அப்பொழுது நகுலேசின் நினைவு வந்தது.

'ஒரு அதிதி மாதிரி வந்த இவனுக்கு அன்புடன் சமைத்துப் போட்டாலும்.. எதிலுமே பட்டுக் கொள்ளாமல் தூர நின்று. எப்படி ஒரு அந்நியனுடன் பேசுவது போலப் பேச முடிந்தது. எதற்கெடுத்தாலும் தான்தான் முதன்மையானவன் என்ற முனைப்புடன், இங்கிதமே இல்லாமல் இயங்கியவன் சகலதையுமே இழந்தது போன்று என்னை நாடிவந்திருப்பது...?

'இவன் நளினமில்லாத, புடம் போடாத ஒரு பிறவியாக இருந்த போதிலும், கனிவுடன், பவ்வியமாக ஏதோ ஒரு வகையான தீவிரத் தன்மையுடன் என் மீது அன்பு பாராட்டினான். நகுலேஸ் இதற்கெல்லாம் முரணாக, ஒரு திட்டத்துடன் ஆக்கிரமித்தது, அருசை கொண்டது ஒரு அறிவு சார்ந்த துணையாகக் கொள்வது போலப் பாவனைபண்ணி, மிகவும் பகைமை கொண்டதெல்லாம் ஏன்...?

கசப்பானவை நினைவுக்கு வர, தனது கோப்பையில் இருந்ததை உண்பதற்கே மனமொப்பாதவளாய் இவனையே பெரிதும் உபசரித்தாள்

சாப்பிட்டபின், இவனுக்கு வெற்றிலை தந்தாள், அவளும் வெற்றிலை போட்டுக் கொண்டாள்.

''உங்களுக்கு அவசரமில்லை என்றால் இன்று தங்கி நாளை போகலாம் இந்த இருட்டிலை போகவேண்டாம்...? என்று கூறியவள், இவனுக்கு முன் அறையில் படுப்பதற்குச் சகல வசதிகளும் செய்து தந்தபின் மலரையும் அழைத்துக் கொண்டு தனது அறைக்குப் போனாள்.

தனிமையில் விடப்பட்ட இவன், அவள் இன்று எப்படியும் தன்னிடம் வருவாள் என்ற எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்தான்

இவனை மட்டுமல்ல, நகுலேசையும், ஏன் - எந்த ஒரு ஆணினது தொடர்புகளையுமே அவள் வேண்டாமென வெறுத்து ஒதுக்கிவிட்டதை இவன் அறிந்திருக்க நியாயமில்லைதான்.

-உலா

# வாழ்க்கை என்பது....!

-அன்னலட்சுமி இராஜதுரை.

வாழ்க்கை என்பது
தெளிந்த
நீரோடை என்று
எண்ணி அதில் குதித்தால்
எம்மை
மூழ்கடிக்க முனைகிறது
சுழியும் சூறாவளியும்
வாழ்க்கை என்பது
வாசமுள்ள ரோசாவென்று
முகர முனைந்து நின்றால்
மூக்கில் குத்துகிறது
முட்கள் மறைந்திருந்து!
வாழ்க்கை என்பது
விளையாட்டு
மைதானமென்று
ஓடிக் குதிக்கச் சென்றால்
குழியும் பள்ளங்களும்
விழவைத்துச் சிரிக்கின்றன!
வாழ்க்கை என்பது
உயர்ந்த மலையென்று
பரபரப்பாய் ஏறினால்
உரத்துவீசும் காற்று
கீழேதான் தள்ளுகிறது!
ஓ!
வாழ்க்கை என்பதுதான்
என்னவோ?
வாழ்க்கை என்பது
தெளிந்த நீரோடைதான்!
வாசமுள்ள ரோசாதான்!
ஓடி விளையாடும்
விளையாட்டு
மைதானந்தான்!
வானை முட்டவென்று
உயர்ந்து நிற்கும் மலைதான்!
அங்கு
துன்பமும் துயரமும்
ஏமாற்றமும் மட்டுமல்ல
வாசமுண்டு நேசமுண்டு!
குளிர்ச்சியுண்டு இன்பமுண்டு!
ஏற்றமுண்டு வெற்றியுண்டு!
நெஞ்சில்
துணிவே துணையானால்!
அன்பே தெய்வமானால்!
அறிவே அரணானால்!
ஆற்றலே வழியானால்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை - நடந்ததும் நடப்பதும்.

நயினை, கனக. நாகேஸ்வரன், M.A

வாழ்க்கை வாழ்வதற்கேயாம்குடும்பவாழ்க்கையே இன்பமும் குதூகலமும் பொருந்தியது இல் வாழ்க்கை என்பது உயர்ந்த நெறியாகும் வாழ்வு விலங்குகளுக்கு கிடையாது இலட்சியமும், ஒழுங்கும், ஒழுக்கமும் உடையது வாழ்வு. வாழ்க்கையெனபது இணைவேயாம் இணைவு உடலால் மட்டுமன்றி உள்ளத்தால் அமையும் பொழுது வாழ்வு சிறக்கிறது. வாழ்க்கையிலே ஆணும் பெண்ணும் மனமொருமித்து இணைகிறார்கள் இந்த இணைவினாலேயே உயிர்வர்க்கம் வாழ்கின்றது.

'மானுடவாழ்வு' என்பது மிகமிக உயரியது மனிதவரலாறென்பது வாழ்க்கை வறலாறு தான் குடும்ப வரலாறுகள் சமுதாயவரலாறாகின்றன. சமுதாயமெனபது குடும்பங்களினதும் மக்களெண்ணிக்கையினதும் தொகுப்பே ஆகும், தனிமனித வாழ்வு (குடும்ப வாழ்வு,) சமுதாயவாழ்வு என்று இருவகையாக வாழ்க்கையைப் பிரிதது நோக்கமுடியும் நல்லவாழ்க்கை கெட்டவாழ்க்கையெனபதும் உணடுதான்.

வாழ்க்கைநெறியை அழகுபடுத்தி - அந்தஸ் தால் உயர்த்துவது சமயவாழ்வாகிறது. வாழ்வும், வழிபாடும் நெருங்கிய தொடர்புடையன. தமிழர் வாழ்வும் வழிபாடும் தொன்மை மிக்கது. பலவேறு படிபபினைகளைத் தரவல்லது வாழ்க்கை வாழ்வதற்கே, மண்ணில் நலலவணணம் வாழலாம் வாழ்க்கை நிலை மேம்பாடு என்பது வசதியான வாழ்க்கையைக குறிப்பது. பொருளாதாரவசதயும், வாழ்க்கைவசதியுமுடைய நாடுகளில் 'வாழ்க்கைத்தரம்' உயர்வாக இருக்கும் தரஙகெட்டவாழ்வு நாய்வாழ்வு; கணடதே காடசி கொண்டதேகோலம் என்று வாழ்வது இழிந்தவாழ்வு வாழ்க்கை சவால்கலைக் கொண்டதாகையால எதிர் நீச்சலடித்தே வாழ்க்கையைச் செமமையாககலாம் தனிமனித 'வாழ்வுச் சீா' தான முனமாதிரியானதும் வழுமியது.

வாழ்க்கை என்னும்போது பெரிதாக மதிப்புடன் பேசப்படுபவள் 'பெண்' எனபது உலகியலார்க்கும் சமயவியலார்க்கும், சமுதயாவியலார்க்கும தெரிநத வொன்று. 'வாழ்க்கையமைவதெல்லாம்... 'என்றும்' தாரமும் குருவும் தலைவிதி...என்றும்தாரத்தை-மனைவியைப்பற்றிய குறிப்புக்களுண்டு.இல்வாழ்க்கை என்ற திருக்குறள் அதிகாரம், வாழ்க்கைத்துணை என்ற அதிகாரம் வாழ்வில் ஒழுங்கையும், ஒழுக்கத்தையும் தெளிவாக வரையறை செய்துரைக்கின்றன.

வாழ்க்கையில் சுவை என்பது உளஒருமைப்பாடு தான். புரிந்துணர்வு தான் வாழ்க்கையின் வெற்றிக்கே அடிப்படை வாழ்க்கையில் சோதனைகளும் வேதனைகளும் ஏற்படும் வாழ்க்கையில் சோதனைப்பட்டவன் அரிச்சந்திரன்: வேதனைப்பட்டவன் இராவணன் சாதனை புரிந்தவன் மார்க்கண்டேயன். பெண்கள்; பெரும்பாலோர் வாழ்க்கையில் வெற்றி கண்டவர்களாகவே மிளிருகின்றனர் உலகம் குடும்பம் என்று பிணைப்பினால் வாழுகின்றது என்றால் அந்தக் குடும்பங்களின் 'செம்மை என்பது குடும்பத் தலைவியரினாலேயே உண்டாகமுடியும் பெரும்பாலான குடும்பத்தலைவியர் குடும்பத் தலைவர்களை மதிக்கின்றார்கள். இதுதான் வழமை- ஆனால் குடும்பத்தலைவியரின் மூப்பும்-அதிகாரமும் குடும்பங்களைச் சீர்குலைத்துச் சோபை இழக்கவும் செய்துவிடுகின்றன. எனவே 'பெணணில் நல்லவளாகிய' குடும்பத் தலைவியின பண்புடைமையும், பணிவுடைமையும் நல்ல சமுதாயத்தை - நலமான செல்வமானமகப்பேற்றினையும் உருவாக்கும் இயல்பான 'பெண்தன்மை' பெண்ணுக்கு அடிப்படைத் தகைமையாகும்.

'வாழ்க்கையனுபவம்' என்பார்களே! இதுமிகவும் சுவாரஸ்யமானது. வாழ்க்கையில் எத்தனையோ களங்களைக் கண்டவர்கள் உளர். வாழ்க்கையில் எதிர் நீச்சலடிப்பவர்கள இன்னுச்சிலர்: வாழ்க்கையேயமையா இன்னுஞ் சிலர். வாழ்க்கையிலே சாதனை புரிந்தவர்கள் இன்றும் நினைக்கப்படுகிறார்கள் வாழ்க்கை நடைமுறையில்; பல்வேறு 'முகங்களை' யுடையது, மகாத்மாகாந்தியின் வாழ்வு, இந்திரா காந்தியின் வாழ்வு, டாக்டர் உ. வே. சுவாமிநாதையரது வாழ்வு, ராமகிருஷ்ணபரமஹம்சரது வாழ்வு அன்னை சாரதாதேவியின் வாழ்வு. சுவாமி விவேகானந்தாவின் வாழ்வு, சுவாமி விபுலானந்தரின் வாழ்வு, ரமணமகரிஷியின் வாழ்வு. மகாகவி பாரதியின் வாழ்வு, பாரதிதாசனின் வாழ்வு, நெப்போலியனின் வாழ்வு காரைக்காலம்மையாரின் வாழ்வு என்பன நடந்தவை. உலகிலேயே நடப்பதும். நடிப்பதும் வாழ்வு தான் 'நாடகத்தால் உன்னடியார்போல் நடித்து என்று தானே வாழ்கிறார் மாணிக்கவாசகர். வாழ்க்கையில் சிலர் நடிககிறார்கள. வாழ்வே சிலருக்கு நடிப்பாகிவிடுகிறது. வாழ்ந்து காட்டியவர்களது முன்னோடிவாழ்க்கையில் மகாத்மாகாநதியின் வாழ்வு சத்தியசோதனையானது. பாரதியின் வாழ்வு 'சுயசரிதை' ஆனது. டாக்டர் உ. வே. சாமினாதையரது, இரசிகமணி கனக. செந்திநாதனதும் வாழ்வு 'என் சரித்திரம்' ஆகியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...க்குளி சிவ நூலகம்

வாழ்க்கையில் குறிக்கோளுடன் வாழ்ந்தவர்களது வரலாறு மறையாதது. என்றும் நினைக்கப்படும் பூசிக்கவும் படும். அது பக்தியையும், பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டமையும். நினைவுகள் - அதிர்வுகள் - உதிர்வுகள் என்பனவும் வாழ்க்கையிலே மறக்க முடியாதவை தியாகமும், அருளாளர்களது பக்தி வாழ்வும் இன்று நடப்பது. குறிக்கோளுடன் செயற்படுவது. அவசியம் 'குறிக்கோளிலாது கெட்டேன்' என்கின்றார் அப்பர்பெருமான். துன்பமே வாழ்வாகாது. அனால் துன்பமே வாழ்வின் சுவைக்கு அடிப்படையாகிறது. துன்பச்சுமையே அனுபவத்தின் வெளிப்பாடாகிறது, எதையும் தாங்கும் இதயம் வாழ்க்கையிலே ஒருவருக்கு உண்டாகுமானால் அவன் வாழ்க்கையில் மேம்பாடடைவான்: உயருவான். இராமாயணகாவியநாயகன் 'இராமன்' வாழ்க்கையைக் கம்பன் காட்டும்நயம் நன்கு கற்றுக் கடைப்பிடிக்கவேண்டிய முன்மாதிரி. அறத்தின்நாயகன், சீதைமணாளன்: தந்தைசொற்கேட்டவன், தாயை வணங்கிப்பணிந்த செம்மல்; சகோதரபாசமுடைய சீலன் குகனொடும் ஐவரானவன். பகைமையை மானுட நேசிப்பினால்; உலகுக்கே புதுநெறிபுகட்டியவன் இராவனனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த உத்தமன். இன்றுபோய்ப் போருக்கு நாளைவா என்றவன். இத்தகு வாழ்வுச் செம்மை எல்லோரும் விரும்பப்படுவது. எப்பொழுதும் அனுமதிக்கப்படுவது.

வாழ்க்கைச் செம்மையும்' வாழ்க்கைச் சீரழிவும் என்று பேசிக்கொள்கிறார்களே! அது என்ன? இப்படித்தான் வாழவேண்டும் மென்பது வாழ்க்கைச் செம்மை. எப்படியும் வாழலாமென்றெண்ணுவது வாழ்க்கைச் சீரழிவு. எனவே வாழும் நெறியறிந்து வாழப்பழகிக் கொள்ளவேண்டும்.

''வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்'' என்பார்கள் சிலர். இறைவழிக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள் இறையருளே விஞ்சியது என்று கொண்டு தமது வாழ்வை அநுபூதிநெறியில் அமைத்துக் கொள்வதுண்டு. எனவே 'வாழ்க்கை நோக்கு' என்பது ஒவ்வொருவருக்கும் முக்கியமான தாயமைகிறது.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'

# தோல்விகண்டு தளராதே!

தோல்விகண்டு தளராதே. குறிப்பிட்டதொரு தோல்வியால் நீபெறத்தக்க தனிப்பெருமையும் தனித்த அறிவும் உள. அப்பெருமையையும் அவ்வறிவையும் நீ உறுதியாகவும் விரைவாகவும் பெறுதற்கு வழிகாட்டும் நல்லாசிரியன் அத்தோல்வியே.

உணர்விலும் சிறந்தவனாக ஒருவனில்லை நீ செய்கிற ஒவ்வொரு பிழையிலும் நீ எய்துகிற ஒவ்வொரு வீழ்ச்சியிலும் உயிருள்ள கருத்துச் செறிந்தபடிப்பினை ஒன்றுள்ளது. நீ ஆய்ந்து காணிற்பெறலாம். அவ்வளவே.

அழிவு செய்வதாய்த்தோன்று பொருளிலும் நன்மையைக்காண ஊன்றிமுயல்பவன் தன் தோல்விகளை யெல்லாம் தக்கதும் முடிந்த முடிபாயதும் ஆகிய வெற்றிக்கு தன்னைக் கொண்டு செல்லும் சிறகமைந்த போர்ப்புரவிகளாய்க் கொள்கின்றான்.

அறிவிலிகள் தங்கள் வழுக்களுக்கும், பழிவினைகளுக்கும பிறரைக்குற்றம் சாட்டுகிறார்கள். வாய்மையை நாடுபவன் தன்னையேபழித்துக் கொள்வானாக. அவன் தன் நடத்தைக்குத் தானே முழுப்பொறுப் பாளியாதலை ஏற்றுக் கொள்வானாக.

- ஜேம்ஸ் ஒலன் -
( James allen )

வேண்டப்படுவதை அறிவீர்கள்.

?

பர்வதன் பதில்கள்!

அடுத்து வரும் இதழ்களில் வாழ்க்கை சம்பந்தமான சகல கேள்விகளுக்கும் பார்வதன் பதில் தருவார் கேளுங்கள்,

98, விவேகானந்தா மேடு
கொழும்பு-13,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழில்,

# சிறுவர் இலக்கியத்துக்கு ஒரு புதிய பரிமாணம்

—வ. இராசையா—

சிறுவர் இலக்கியம் தமிழிலே உரைநடையிலும், உரைநடைவிரவிய சித்திரவடிவிலும். கவிதை நடையிலும் இருக்கின்றது. இவற்றுள் உரைநடையில் அமைந்த இலக்கியமே நமது சிறுவர்களால் அதிகமாகப் படிக்கப்படுகின்றது. இதற்கு அடுத்தபடியாகச் சித்திரவடிவ இலக்கியத்தைக் கொள்ளலாம். கவிதை நடையில் அமைந்தவற்றை நமது சிறார்கள் படிப்பது குறைவு. சிறுவர் கவிதை அவர்களுக்கு பரிச்சயம் குறைந்த - ஓரளவு அந்நியமான - ஓர் இலக்கியவடிவமாகவே இருந்து வருகிறது.

உரைநடைதான் வாழ்வின் சகல துறைகளிலும் லாவகமாகப் பயன்படுத்தக் கூடிய மொழிவடிவம், அறிவியல் சார்ந்த விடையங்களையெல்லாம் உரைநடையில்தான் கூறமுடியும். இவ்வகையில் உரைநடையே சிறுவர்களுக்கு உற்ற தோழனாக விளங்குகிறது. கவிதை அவ்வாறு இல்லை. அவர்கள் அதைத் தேடிப் படித்துப் பரிச்சயப் படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்நிலை இயற்கையானதுதான்.

கவிதை அந்நியப்படுத்தப்பட்டுள்ளது. என்பதாகாகச் சிறுவர்கள் கவிதைவடிவ இலக்கியத்தைப் புறக்கணித்துவிடக்கூடாது. அது அவர்களது எதிர்கால வாழ்வுக்கு - வாழ்வின், சீர்மைக்கு துணையாக நிற்கும், ''இலக்கியக் கல்வி மனநிறை அனுபவம் தருவது: மனதிற்கு அமைதி தருவது; மனதை உயர்த்துவது'' என்று ஓர் அறிஞர் கூறுகிறார். உரைநடை. கவிதை நடை ஆகிய இரண்டு பிரிவுகளையுமே இங்கே அவர் இலக்கியம் என்று குறிப்பிடுகிறார். சிறுவர்கள் தாங்கள் பெரியவர்களாக வளர்ந்த பின் இந்த அறிஞர் குறிப்பிடும் அனுபவங்களைப் பெறவேண்டுமானால், அவர்கள் இளமையிலேயே கவிதை வடிவ இலக்கியங்களையும் படிக்கவேண்டும். அவற்றோடு பரிச்சயம் செய்து கொள்ளவேண்டும் இதற்கேற்ற ஆர்வம் பிறக்கும் வகையில் கவிதை இலக்கியத்தை அவர்களுக்கு அறிமுகஞ் செய்வதும், அவர்களை நெறிப்படுத்துவதும் அவசியம்.

வளர்ந்தோருக்குரிய இலக்கியங்களைப் போல் சிறுவர்களுக்கான இலக்கியமும் நம்மிடையே புத்தக வடிவில்தான் இருக்கிறது, நமது சிறுவர்கள் கதைகளைப் 'படிக்கிறார்கள்' பலதுறைப்பட்ட கட்டுரைகளைப் 'படிக்கிறார்கள்' அவ்வாறே கவிதை நூல்களையும் 'படிக்கிறார்கள்'! எல்லாம் 'படித்தால்' தான்' அதாவது கட்புலவழியான தேட்டம்! படித்தல் என்பது உரை நடைக்கு பொருத்தமாயிருக்கும். ஆனால், கவிதை இலக்கியத்துக்கு அது முற்றும் பொருந்திவராது. கவிதை உணர்வுவழி நுகரப்படவேண்டியது. ஆதலால், அதற்குப்படித்தலுடன் கேட்டலும் நிகழவேண்டும், கட்புலனோடு செவிப்புலனும் தொழிற்படவேண்டும். சிறுவர்க்குரிய கவிதைகளுக்கு இசை இன்றியமையாதது என்பது இங்குதான் உணரப்படுகின்றது.

சிறுவர்களுக்கு கவிதையை இசையுடன் இணைத்து அறிமுகம் செய்தல்வேண்டும் இந்த மரபு பாடசாலைகளில் பாலர் வகுப்புகளில் கைக்கொள்ளப்படுகிறது. சிறுவர்களுக்குப் பாடல்களில் ஆர்வம் ஏற்படுத்தக்கூடியது நல்லதொரு ஆரம்பம், இது. ஆனால், இந்தச்செல்நெறி ஒன்றிரண்டு ஆண்டுகளில், சிறுவர் மேலே ஏற ஏற திசைதிரும்பி விடுகிறது. இசை கவிதையை விட்டு நழுவிப்போய்விட, சிறுவர்கள் கவிதையை வெறும் சடலமாக, புத்தகங்களிலே படிக்கவேண்டிவருகிறது. இதனால், கவிதையில் ரசனை காணும் திறமை அவர்களிடம் நன்கு வளர முடிவதில்லை, இந்த நிலை தவிர்க்கப்படல் வேண்டும்,

கவிதை இலக்கியத்தில் சிறுவர்களுக்கு நாட்டத்தை ஏற்படுத்துவதற்குப் பொருத்தமான வழி, சிறுவர்க்கேற்ற கவிதைகளுக்கு இசையமைத்து. அவற்றை ஒலிப்பதிவு செய்து, கசற்றுக்களாக வழங்குவதுதான்.

சிறுவர்க்கேற்ற சிறந்த கவிதைகளைத்தேர்ந்தெடுத்து, அவர்களது வயதுக் கேற்றவாறு அவற்றை தரப்படுத்தி, வெவ்வேறு கசற்றுக்களில் வெளியிட்டால், அது நமது சிறார்க்கு ஒரு கொடையாக அமையும். இத்தகைய 'கசெற்பதிவு' சிறுவர் இலக்கிய நூல்களுக்கு ஈடானது. இது சிறுவர் இலக்கியத்துக்கு ஒரு புதிய பரிமாணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பாட்டுக்கள் அடங்கிய ஒலிப்பதிவுக் கசெட் ஒன்று அண்மைக் காலத்தில், யாழ் கல்வித் துறையினரால் வெளியிடப்பட்டிருந்தது. அருமையான பாலர் கவிதைகள் சில, பொருத்தமான இசையிலே அந்தக் கசெற்றில் பதியப்பட்டிருந்தன. இப்படியான கசெற்றுகள் ஆங்கிலம் முதலிய மொழிகளில் உண்டு. முன்னேறிய நாடுகளில் இத்தகைய ஒலிப்பதிவுக் கசெற்றுகள், சிறுவர் இலக்கியத்தின் நீங்காத ஓர் அங்கமாக அமைந்துள்ளன. அந்நாடுகளில், சிறுவர் கவிதைகள் மாத்திரமல்ல; கதைகளும் அவசியமான ஒலிஜாலங்களுடன் பதிவுசெய்யப்பட்டு, சிறுவர்க்கு வழங்கப்படுகின்றன.

பள்ளிப் படிப்புக்கு வேண்டிய பாடற்கசெற்றுகள் போலவே, பொதுரசனைக்குரிய சிறுவர் கவிதைகளுக்கும் ஒலிப்பதிவுகள் தேவை. சிறுவர்க்கான நூல்கள் வெளியிடப்படுவது போன்று இவ்வகையான கசெற்றுகளும் வெளியிடப்படவேண்டும். ஒரு சிறுவர் கவிதை நூல் வெளியிடப்படும்போது அந்நூலிலுள்ள கவிதைகளின் ஒலிப்பதிவுக் கசெற்றும் வெளியிடப்படுமானால், அது எவ்வளவு பொருத்தமாக பயன்மிக்கதாக அமையும் என்பது சொல்லாமலே தெரியவரும்.

பிறந்தநாட் பரிசாக இக்காலத்தில் சிறுவர்களுக்கு நல்ல நூல்களை வழங்குகிறோம். இவ்வாறே சிறுவர்பாடல் அடங்கிய 'கசெற்று'களையும் பரிசாகக் கொடுக்கும் நிலை நம்மிடையே உருவாக வேண்டும்.

நமது சிறுவர்கள். தங்களது கட்புலனுக்கு அளவு மீறி வேலை கொடுக்கிறார்கள். புத்தகமும் தொலைக்காட்சியும் அவர்களது கண்ணை பெருமளவாகப் பாதிக்கின்றன. இந்தத் தாக்கத்தை ஓரளவாவது குறைப்பதற்கு சிறுவர் - ஒலிப்பதிவுக் கசெற்றுகள் உதவும்.

கவிதைகள் எழுத்துவடிவில் இருக்கும்போது, சிறுவர்கள் அவற்றைப் படித்துப் புரிந்துகொள்வதற்கு சற்றே சிரமப்படத்தான் செய்வார்கள். படிக்கும் கவிதையின் கட்டமைப்புக் கொஞ்சம் இறுக்கமாக இருந்துவிட்டால், அந்தச் சிரமம் அதிகமாகிவிடும். ஆனால், அக்கவிதைகளை இசையில் அமைத்துப் பாடும்போது அந்த இறுக்கம் தளர்ந்துவிடும். கவிதையின் நெகிழ்வும், சந்தமும், இசையின் கனிவும் ஒன்று சேர்ந்து சிறுவர்களைக் கவர்ந்திழுக்கும்.

இசையுடன் இணைந்த கவிதை சிறுவர்களது மனதில் சுலபமாகப் பதியும்தன்மை உள்ளது. இசையின் கவர்ச்சி காரணமாக அவர்கள் மீண்டும் மீண்டும் அப்பாடல்களைக் கேட்க விரும்புவார்கள். தாங்களும் பாடி மகிழ்வார்கள். அதனால் கவிதையின் பொருளும் நயமும் அவர்களது மனதில் நன்கு சுவறும். கவிதை இலக்கியத்தில் அவர்களுக்கு ஆர்வம் பிறக்கும். அத்துடன் இசை ஞானமும் பிறக்கும்.

இந்நாளில், சிறுவர்கள் தங்களது வயதுக்கு ஒவ்வாத சினிமாப்பாடல்களையெல்லாம் பாடுவதைக் காண்கிறோம. தமது பிள்ளைகளின் வளர்ச்சியில் அக்கறைகொண்ட பெற்றோர்க்கு இது ஒரு பிரச்சினை. சிறுவர்களது இசைப்பிரியத்துக்கு ஊறு விளைவிக்காத வகையில் இது தீர்க்கப்படல் வேண்டும. சிறுவர்க்கேற்ற கவிதைகளை இசையமைத்து அவர்களுக்கு வழங்கினால், அவர்கள் இவ்வாறு தறிகெட்டு செல்ல வாய்ப்பு ஏற்படமாட்டாது. இத்தகைய கசெற்றுகள் தமிழில் இல்லாத குறையை இவ்விடத்தில் நாம் முழுமையாக உணரக் கூடியதாயிருக்கிறது அல்லவா?

சிறுவர் பாடல்கள், பாடற்பதிவுக் கசெற்றுகள் என்னும்போது, நமது இசையமைப்பாளர்களதும், பாடகர்களதும் பங்களிப்பின் இன்றியமையாமையை இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும். நமது சிறுவர் இலக்கியத்தின் இந்தப் புதிய பரிமாண வளர்ச்சிக்கு அவர்களது பங்களிப்பு அவசியம் தேவை. அவர்களது இசைப் புலமை இத்துறையில் பரிமளிக்கவேண்டும்; அது தமிழுக்கு வளம் சேர்க்க வேண்டும்.

## வாழ்க்கை

'தாமரைத் தீவான்'

வாழ்க்கையே வாழ்க்கை ! எங்கள்
    வாழ்க்கையின் அருமை தன்னை
வாழ்ந்தலோ பார்க்க வேண்டும் ?
    வாழ்த்துவார் அகதி என்றே !
போக்கிதோர் உலகப் போக்கே !
    போரினால் வந்த போக்கே !
நோக்கிதற் கின்று வேறே !
    நொடி எமக்கொரு நாள் ஐயா !

ஊரிலாக் காணி இல்லா
    உறைவிடமில்லா வாழ்க்கை !
நேரிலாச் சீரிலாத
    நிம்மதி யில்லா வாழ்க்கை !
பாரிலே எல்லாம் ஒன்றாய்ப்
    பறி கொடுத்திட்ட வாழ்க்கை !
ஆருளார் ஐயா கேட்க ? -
    அகதி எம் நிலையைப் பார்க்க ?

காலையில் உரொட்டித்துண்டு !
    கடும் பகல் ஒருவாய்ச் சோறு !
மாலையில் 'குறுணல்' கஞ்சி !
    மற்றை நாள் பழைய பாட்டே !
வேலையோ செய்தால், ஏதும்
    வேண்டினால்.........இல்லையாயின்
நாளையும் உண்ப தெங்கே ?
    நல்லூட்டம் பெறுவ தெங்கே ?

நோயென்ன ? நொடிகளென்ன ?
    நுளம்பென்ன ? புகைச்சலென்ன ?
பாயென்ன ? மூட்டையென்ன ?
    படுக்கையில் அழுகையென்ன ?
நாயென்ன ? காவல் என்ன ?
    நள்ளிராக் கனவு மென்ன ?
வாயில்லாப்பூச்சி எங்கள்
    வாழ்க்கையும் வாழ்க்கைதானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாணப் பொருத்தம் பார்ப்பது எப்படி?

_நகைச்சுவை மன்னன்
பொன். சண்முகநாதன்-

திருமணம் செய்துகொள்வதற்கு முன்னர் பொருத்தம் பார்க்கவேண்டும், என்றார்கள் சோதிட நூல் வல்லுநர்கள். அவர்கள் பதினான்கு வகைப் பொருத்தங்களை அலசி ஆராய்ந்து, அதில் பெரும்பாலான பொருத்தங்கள் ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒத்து வந்தால் மட்டுமே திருமணம் செய்துகொள்ள இசைவு தருவார்கள் குடும்பங்களிலே ஏற்படும் மனமுறிவுக்கும், மணமுறிவுக்கும் திருமணப் பொருத்தம் இல்லாமை தான் காரணம் என்பது அவர்களின் வாதம்.

இந்த இடத்தில், என்னுடைய அனுபவத்தைக் கொண்டு சொல்லுகிறேன் திருமணப் பொருத்தம் 'உத்தமம்' என்று சோதிடர்களால் 'சேட்டிபிக்கற்' கொடுக்கப்பட்ட எத்தனையோ குடும்பங்களிலே அமைதியின்மையும், குழப்பங்களும் ஏற்பட்டிருப்பதை என்னால் ஆதாரம் காட்ட முடியும். அதே போல் பொருத்தமில்லை எனசோதிடர்கள் கூறியும், அதைக்கேளாமல் தம் இச்சைப்படி திருமணம் செய்துகொண்டு நன்றாக வாழ்ந்துவரும் தம்பதிகளையும் என்னால் சான்று காட்ட முடியும்.

இதையெல்லாம் எதற்காகச் சொல்லுகின்றேன் என்றால் பழைய சாத்திரங்களை யெல்லாம் காலத்திற்கேற்றவாறு மாற்றியும் புதுப்பித்தும் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது, என்பதை விளக்கவேயாகும். 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்பதும் திருமணபொருத்தங்களில் மட்டும் விதிவிலக்கா என்ன? எனவே இனிமேல் திருமணம் செய்து கொள்வோரின் நல்வாழ்வுக்காக திருமணப் பொருத்தங்கள் என்றால் எவை என்பதையும் அதனைக்கணிக்கும் முறையையும் இப்போது உங்களுக்கு விளக்க முன் வந்திருக்கிறேன். இந்த வகையில் பொருத்தம் பார்த்து செய்யப்பெறும் திருமணங்கள் பிழை போகாது என்பதற்கு இப்போழுதே நான் உத்தரவாதமும் தருகின்றேன். போதுமா?

இளைஞர்களாகிய உங்களில் பலரும் இனிமேல் தான் திருமணம் செய்து கொள்ளப்போகிறீர்கள் சிலர் பார்த்தும் வைத்திருக்கலாம் அதனால் எனது அறிவுரைகள் உங்கள் அனைவருக்கும் நலன்பயக்கும் என்பது எனதெண்ணம்.

## நட்சத்திரப்பொருத்தம்

நட்சத்திரம் என்பது இங்கு சினிமா நடிக, நடிகைகளைக் குறிக்கும் நாம் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட சினிமா நடிக - நடிகையின் விசிறியாக - அவர்களுக்காக எதையும் பரித்தியாகம் செய்யக்கூடிய உள்ளப்பாங்குடன் இருக்கிறோம் அல்லவா? திருமணம் செய்யப் பொகிறவர்களும் அப்படித்தான் இருப்பார்கள். கணவனுடைய அபிமான நட்சத்திரம் ஒன்றாகவும் மனைவியினுடைய அபிமான நட்சத்திரம் அதற்கு மறாகவும் இருந்துவிட்டால் எப்படி இருக்கும்? எந்தப் படத்திற்குப் போவது என்பதில் பிரச்சனை ஆரம்பமாகி, இருவரும் வேறு, படங்களுக்கு வேறு, வேறாகப் போவது வரையில் குடும்பத்திலே ஒரு பெரிய விரிசலே ஏற்பட்டுவிடும். கணவனுக்குப் பெண் நடிகைமீதும், மனைவிக்கு ஆண் நடிகன் மீதும் மோகம் என்றால் ஊடலுக்கும் குழப்பத்திற்கும் கேட்கவே வேண்டியதில்லை எனவே குடும்பத்திலே ஏறுமாறான நிலைமை ஏற்படாமல் தவிர்க்க வேண்டுமானால், திருமணத்திற்கு முன்னரே மணமக்களாக வரப்போகிறவர்களிடையே திருமணப் பொருத்தங்களிலே முதலாவதான நட்சத்திரப் பொருத்தம் இருக்கின்றதா என்பதை கவனிக்கவேண்டும்.

## கணப் பொருத்தம்

கணம் என்பது விலங்கு. பறவைகளைக் குறிப்பதாகும். சிலர்- குறிப்பாகப் பெண்களில் கணிசமானோர் நாய், பூனை, கோழி ஆகியவைகளில் ஒன்றையோ பலவற்றையோ வளர்ப்பதிலும், அவைகளைக் கண்ணும் கருத்துமாகப் பேணிப் பாதுகாப்பதிலும் அக்கறை செலுத்துவார்கள். இதெல்லாம் சில ஆண்களுக்குக் கட்டோடு பிடிக்காத - கேட்டாலே 'அலர்ஜி' உண்டாக்கக் கூடியதாகவிருக்கும். இதே போல் ஆடு, கோழி போன்ற கணகங்களைச சாப்பிடாத - அல்லது குறிப்பிட்ட சில கணகங்களையே சாப்பிடும் ஆண், பெண்களும் இருக்கிறார்கள். என்பதையும் நினைவூட்ட விரும்புகின்றேன். எனவே கணப் பொருத்தம் என்பது இவற்றில் நேர்மாறானவர்களை விலக்கி ஒற்றுமை காண்பதேயாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் ... நூலகம்

## கிரகப் பொருத்தம்

திருமணமான தம்பதியர் பலருக்கு வீடு கட்ட வேண்டிய அவசியம் ஏற்படலாம் அப்பொழுது கூடவே அவர்களிடையே பிரச்சினையும் ஏற்படும் வீடு எப்படி அமைய வேண்டும்? கூரைக்கு 'சீற்' போடுவதா? ஓடுபோடுவதா? படுக்கையறைக்கு எத்தனை யன்னல்கள் போடுவது? சுவாமி அறையில் எத்தனை அல்லது என்ன படங்கள் மாட்டுவது? சுவருக்கு என்ன மை பூசுவது? தரைக்குப் எந்தப் பொலிஸ் தேய்ப்பது? எத்தனையோ; சும்மாவா சொன்னார்கள். கலியாணத்தைப்பண்ணிப்பார் வீட்டைக்கட்டிப்பார் என்று, திருமணத்தைத் தொடர்ந்து அதனோடு தொடர்ப்புடைய ஒரு பெரிய சிக்கல் இது என்பதால் தான் அப்படிச் சொல்லியிருக்க வேண்டும். இந்தச்சிக்கலில் இருந்து விடுபடுவதற்குரிய ஒரு வழி திருமணத்திற்கு முன்னரே அவர்கள் எதிர்காலத்தில் அமைக்க விருக்கும் வீட்டின் மாதிரிப்படம் ஒன்றினை வரைந்து, அது சம்பந்தமான ஏனைய விபரங்களையும் அதிலே குறிப்பிட்டு அதற்கு அவர்கள் இருவரிடமிருந்தும் ஒப்புதல் பெறுவதேயாகும், இதனைக்கிரகப் பொருத்தம் என்போம்.

## விருட்சப் பொருத்தம்

கணவனுக்கு வீட்டிலே ஒரு தோட்டம் அமைத்து, அதிலே ஓய்வு நேரத்திலே உழைக்க வேண்டும் என்ற ஆசையிருக்கும். உணவுத் தேவைகளில் சிலவற்றையேனும் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது அவன் விருப்பம். அதற்கு மனைவியும் உதவி ஒத்தாசையாக இருக்க வேண்டும், என விரும்புவான். ஆனால் அவனுக்கு வாய்த்த மனைவியோ அவனுக்கு இத்துறையில எந்த விதத்திலும் உதவாதவளாக குரோட்டன் செடிகளையும், பூசைக்கு உதவாத பூங்கன்றுகளையும் வளர்ப்பதிலும் வாழ்நாளை வீணாக்குபவளாயும் இருப்பாள். வீட்டுத்தோட்டத்தால் என்ன பயன்? மார்க்கற்றுக்குப் போய் நாம் விரும்பியதை வாங்குவது போல வருமா, என கணவனை எதிர்த்துப் பேசவும் துணிகிறாள். சில சமயம் இதற்கு நேர்மாறாக தம்பதிகளையும் நாம் காணமுடியும். இப்பொழுது விருட்சப் பொருத்தம் பார்ப்பது எப்படி என்பது உங்களுக்கு விளங்குகிறதல்லவா?

## வசியப் பொருத்தம்

ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் வெளிக்கவர்ச்சியில் மயங்கி - அந்தவசியப்பொருத்தம் காரணமாகவே திருணம் செய்திருக்கலாம்- ஆனால் இந்த மனநிலை திருமணத்தின் பின்னரும் எல்லாருக்கும் நீடித்திருக்கும் என்று சொல்லமுடியாது. மனைவி தனது அலங்காரத்தில் அளவுக்கதிகமான அக்கறை காட்டினால் அவள் இனியும் யாருக்காக அலங்காரம் செய்ய வேண்டும் எனக் கணவன் ஐயப்படலாம். அது போல கணவன் திருமணத்தின் பின்னரும் சைட்பேர்ன்ஸ் பெல்ஸ் என்றெல்லாம் இளவட்டங்களைப் போல தன்னை அழகுபடுத்திக் கொள்வதைக் காணும் மனைவிக்கு 'அவருக்கு பரத்தையர் பால் தொடர்பிருக்குமோ' என்ற கவலையும் வேதனையும் ஏற்படலாம் இதற்கு மாறாக வேறுசிலர் தமது கணவனோ, மனைவியோ திருமணத்தின் பின்னரும் கவர்ச்சி கரமாக விளங்க வேண்டும் என விரும்புவார்கள். தமது துணைவர் அல்லது துணைவி தாம் விரும்புவது போல் அல்லது சொல்வது போல் அலங்காரங்கள் செய்ய வேண்டும், என்பது அவர்களது விருப்பமாக விருக்கும் திருமணத்திற்குப் பின்னர் ஒருவனதும், ஒருத்தியினதும் மனநிலையும் விருப்பமும் எப்படியிருக்கும் என்பதை அறிந்து வசியப் பொருத்தத்தைக் கணித்துக் கொள்ள வேண்டும்

## இரசனை பொருத்தம்

மக்களில் பலரும் தமது தொழில் அல்லது கடமைகளை விட ஓய்வு நேரத்தில் சில பொழுது போக்குகளை அல்லது கலைகளை மேற்கொள்வது உண்டல்லவா? இதனையே இரசனை என்கிறோம் திருமணம் செய்து கொண்ட கணவன் மனைவியரிடையே இந்த இரசனையில் முரண்பாடு காணப்பட்டால் அதுவும் அவர்களிடையே சண்டைகள் ஏற்படக் காரணமாக அமைந்துவிடும். எடுத்துக்காட்டாக கணவனானவன் ஓர் எழுத்தாளனாகவோ அல்லது ஒரு படிப்பாளியாகவோ இருந்து, மனைவியானவள் ஒரு 'நீங்கள் கேட்டவை' இரசிகையாகவோ அல்லது சங்கீதக் கலாவல்லியாகவோ இருந்தால் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். கணவன் ஓய்வு நேரமாகப் பார்த்து ஏதாவது எழுதவோ படிக்கவோ உட்காரும் சமயத்தில மனைவி வானொலிப்பெட்டியைத்திறந்து விட்டாலோ அல்லது உச்சக் குரலில் ஒரு சாகித்தியத்தைச் சாதகம் பண்ண முற்பட்டாலோ கணவனுக்கு எப்படியிருக்கும்? இதேபோல் மனைவி உயர்தர இசை ஆர்வம் கொண்டவளாகவும் கணவன் வெறும் பொப்பிசைப் புயலாகவும் இருந்தால் எப்படி இருக்கும் என்பதையும் எண்ணிப்பாருங்கள். கடைசியாக இரசனைப் பொருத்தம் பார்ப்பதையும் தெரிந்து கொண்டீர்களா?

இப்பொழுது ஆறுவகைத் திருமணப் பொருத்தங்களையும் அறிந்து கொண்டீர்கள் அல்லவா? இனி திருமணப்பொருத்தம் கணிப்பது எப்படி என்பதை கவனியுங்கள்.

ஆணுக்கும், பெண்ணுக்கும்ஆறு பொருத்தங்களும் அமைந்திருந்தால், உத்தமம் - செய்யலாம் (இதற்கு நானும் உத்தரவாதம் தருகிறேன்.) நாலு, ஐந்து பொருத்தங்கள் அமைந்திருந்தால் மத்திமம் - செய்யலாம். ஆனால் குடும்பத்தில அவ்வப்போது சில பிரச்சினைகளும் குழப்பங்களும் அடிதடி சண்டைகளும் எற்படும். (இதற்கு யார்தான் என்ன செய்யமுடியும்) மூன்றும் அதற்குக் குறைந்த பொருத்தங்களும் என்

(20ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி

-தம்பிஐயா தேவதாஸ்

மனிதன் வெற்றி வேண்டுமாயின்; அவன் இயங்க வேண்டும், செயல்பட வேண்டும், உழைக்க வேண்டும், ஒரு குறிக்கோளை உண்டு பண்ணிக்கொண்டு அதனை அடைவதற்கு முயலவேண்டும் முயற்சியே, உலகின் முகத்தையே மாற்றி அமைத்திருக்கிறது. முன்பு எவரோ முயன்றதன் பலன்கள் தான் இன்று நாம் நுகரும் அத்தனை வசதிகளும்.

திருவள்ளுவர் முயன்றிராவிட்டால் எமக்கு திருக்குறள் கிடைத்திருக்குமா? எடிசன் முயன்றிரா விட்டால் எமக்கு மின்சாரம் கிடைத்திருக்குமா? வானொலிப் பெட்டியைத் தந்த மார்க்கோனியை எம்மால் மறக்க முடியுமா?

இப்படி எல்லாப் பொருட்களுமே எவரோ ஒருவர் முயன்றதன் பலன்தான். அவர்கள் மட்டும் முயலாது முழங்காலை மடித்துக் கொண்டிருந்தால் மனித நாகரிகம் முன்னேறியிருக்குமா? முயற்சி இல்லாவிட்டால் உலகில் மலர்ச்சி ஏற்பட்டிருக்காது. முயற்சி இல்லாதவர் ஒரு போதும் முன்னுக்கு வரவே முடியாது. உயர்வு பெறவே முடியாது.

உலகப்பெரும் செல்வந்தர் ஜோன்டி ரொக்பெல்லர் முதலில் ஒரு குடிசையில் தான் பிறந்தார். ஒரு நாளைக்கு 15 மணி நேரம் ஒரு பண்ணையில் உழைத்த பின் அவருக்கு கிடைத்த பணம் 75 சதங்கள் மட்டுமே ஆனாலும் அவர் மனம் சோர்வடையவில்லை.

ரொக்பெல்லர் மேற் கொண்ட விடா முயற்சியின் காரணமாக இறுதியில் எண்ணைக் கொம்பனி ஒன்றின்உரிமையாளனாகி. அந்ததொழில்நிலையத்தின் மூலம்தான் அவர் கோடி கோடியாய் பணம்சேர்த்தார் உலகப் பணக்காரர் என்னும் பெயர்பெற்றார்

குடிசையில் பிறந்த றொக் பெல்லரைப் போல் பலரை தேடிச் செல்வராக்கியது முயற்சிதான். இவர்கள் முயற்சி மட்டும் ஆற்றாதிருப்பார்களாயின், ஏதோ ஒரு மூலையில் எவருக்கும் தெரியாமல் வாழ்ந்து மறைந்திருப்பார். வாழ்வின் வளமும் வனப்புப் பெற வேண்டுமாயின் நாம் முயன்றாக வேண்டும். இறந்த பின்னரும் வாழவேண்டுமாயின் நாம் முயன்று சாதனை புரிந்தாகவேண்டும்.

முயன்று வினை முடித்து வெற்றி பெற்றால் மட்டுமே கால வெள்ளத்தை நம் காலால் உதைத் தெறியலாம்

பிற மனிதர்களின் உள்ளத்தில் நாம் வாழ வேண்டுமாயின் முயன்று சாதனைகள் புரியவேண்டும் அப்படி சாதனைகள் புரியவேண்டுமாயின் விடா முயற்சியை இடை விடாது செய்யவேண்டும் வெற்றியும் தோல்வியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்பார்கள்.

'உலகில் வெற்றி பெறவேண்டுமானால் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்ட மாதிரி நாங்கள் தோற்றம் தரவேண்டும்'

என்றான், நெப்போலியன்.

'வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் வெற்றி பெற முடியாது, சிலதுறைகளில் தோல்வி நேரிடத்தான் செய்யும்'

என்றார் டாக்டர் மு. வரதராசனார்.

எனவே எவரும் வெற்றியைக் கண்டு வீங்கி விடவும் வேண்டாம். தோல்வியை கண்டு துவண்டு விடவும் வேண்டாம்.

பெருங் கூட்டங்களும் கூக்குரல்களும்எமக்கு வெற்றியைத் தருவதில்லை அமைதியாக அனுபவிக்கும் துயரங்களே வெற்றியைத் தரும் அதை நாம் எவ்வளவு விரைவில் உணர்ந்து கொள்ளுகிறோமோ அவ்வளவு உறுதியாகவும் விரைவாகவும் வெற்றி எம்மை வந்தடையும்

தோல்வி என்பது கூட ஒரு கல்விதான் அது வெற்றிக்கு முதற்படி என்று கூட சொல்லலாம். தோல்வி ஒருவனை சீர்குலைத்து விடுவதில்லை 'எனக்கு தோல்வி கிட்டி விட்டது; நான் எதற்கும் உபயோகம் இல்லாதவன் என்ற மனநிலை தான் சீர்குலைவை ஏற்படுத்துகிறது

வெற்றியைப் பற்றி அறிஞர் சார்லஸ் பக்ஸ்டன என்ன கூறுகிறார் தெரியுமா?

வெற்றிப்பாதையை ஒவ்வொரு அடியாக கொஞ்சம் கொஞ்சமாக நடந்தடையவேண்டும் அப்படி நடப் போமானால் பொருட் செல்வமும் அறிவும் புகழும் எம்மை தானாகவே வந்தடையும் என்றார் அந்த அறிஞர்

தோல்வியைப் பற்றி இன்னொரு அறிஞர் இப்படிக்கூறுகிறார். M. R. ஹெச் என்ற அந்த அறிஞர் கூறுவது இதுதான.

தோல்வி என்பது மரணமல்ல! தோல்வி அடைந்து விட்டமே என்று துன்பப்படுவது தான் மரணத்துக்கு காரணமாகிறது. ஒவ்வொரு தோல்வியும் ஒவ்வொரு வெற்றிக்கும் வித்தாக அமையக் கூடும், என்ற அந்த அறிஞரின் வார்த்தைகளை உற்று நோக்க வேண்டும். வெற்றி என்பது ஒரு குறிக்கோள் அன்று அது ஒரு பயணமே ஆகும். பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கவேண்டும்

'வெற்றிக்கு தேவையான சூழ்நிலைக்கு தகுந்தவாறு தன்னை மாற்றி அமைத்துக் கொள்பவர்களே வாழ்வில் வெற்றி பெற முடியும் என்றார் பேர்னாட்சோ இன்றையதினம் எத்தனையோமனிதர்களின் வெற்றியையும் தோல்வியையும் தீர்மானிக்கும் சுபதினம்.

வெற்றி பெற்றவர்கள் வீணாகவீங்கக் கூடாது தோல்வி கண்டவர் துவண்டு போகக்கூடாது. இளைஞர்கள் மட்டுமல்ல எல்லோருமே வெற்றியையும் தோல்வியையும் ஒன்றாகவே மதிப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 தெல்லிப்பழை பொது நூலகம் 

## உருவகக் கதை

# சாதனை

பத்மா சோமகாந்தன்.

வரட்சி; பல மாதங்களாக மழையையே காணாத கடும் வரட்சி கோடை வெயிலின் கொடூரம் கொடியவர்களின் நெஞ்சம் போலத் தகித்து எரிந்தது. இடையிடையே மெல்லிய காற்று; வயலை ஊடறுத்துச் செல்லும் நீண்ட புழுதி படிந்த தெருவின் இருமருங்கும் தடிமாகவே வளர்ந்து பெரிதாகிவிட்ட மரங்கள்; பதுக்கி வைக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள் விற்பனைக்கு வரும்போது மிண்டியடித்து அதைப்பெற கியூவரிசையில் நிற்கும் மக்கள் கூட்டம்போல அருமையாக வீசும் அந்த மெல்லிய காற்றைத் தழுவுவதற்கு அவலத்தோடும் ஆவேசத்தோடும் அம்மரங்கள் அவாவுகின்றன. கொப்பையும் இலைகளையும் நீட்டி முடக்கி வளைந்து நெளிந்து தம்மையே அவை ஆசுவாசப்படுத்திக் கொள்ளுகின்றன.

ஊசியைப் போன்ற கூரிய இலைகளுடைய என்னை உதிர்ந்த இலைகள், கடதாசிகள், முதலிய குப்பைகள் யாவும் வந்தணைந்து கொள்கின்றனவே என உள்ளத்தில் தன்னைப் பற்றிப்பெருமையாக எண்ணி மகிழ்ந்துகொண்ட ஈச்சமரம், தன்னருகே தனித்து நின்ற பனைமரத்தை நிமிர்ந்து நோக்கியது. அமைதியோ ஆறுதலோ இன்றி வரண்ட பெருமூச் செறிந்த பனையைப் பார்த்து, ''அன்பான அண்ணாவே! எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்தச் சிந்தனையோ'' என்றது.

''அதை ஏன் கேட்கிறாய்? எனது ஆசையெல்லாம் நிராசையாய் நீண்ட பெருமூச்சாய் முடிந்துவிட்டது. அதைககேட்டு என் மனவேதனையை ஏன் கிளறுகிறாய்?'' என்ற பதிலை முணு முணுத்து முடித்தது பனை.

அட! உங்கள் துயரம் எனக்குத் தெரியக் கூடாததா? நேற்று முழுதும் நன்றாய்த்தான் இருந்தீர்களே; கடந்த இரவுக்கிடையில் என்ன தான் நடந்துவிட்டது; அதுவும் எனக்குத் தெரியாமல். உண்மையாக இந்தத் தம்பியிடம் உங்களுக்கு அன்பு இருக்குமென்றால், ஒளியாமல் மறையாமல் எனக்கு உண்மையைக்கக்கிவிட வேண்டும் என அன்புடன் கெஞ்சியது ஈச்சமரம்.

வரண்டு போன தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பனை பேசத் தொடங்கியது; ''உழுத்துப்போன எனது இளமைக் கால இலட்சியத்தையும் ஆசைகளையும் பற்றி உன்னிடம் கதையளப்பதில் எனக்கேன் தயக்கம் கடந்த இரவு இரு இளைஞர்கள் இவ்வழியால் சென்றனர். போகிற போக்கில் அவர்கள் தமது எதிர்கால அபிலாஷைகளைப் பற்றிப் பேசிக்கொண்டனர். ஒருவர் மற்றவரிடம், 'அடமைச்சான் எப்படியாவது ஏதாவது புதுவிதமாக முன்னர் யாருமே முயற்சித்திருக்காததாக புதுமையானதாக ஏதாவது ஒரு விஷயத்தைச் சாதித்துப் பேரும் புகழும் அடையவேண்டுமென்பதுதான் எனது கனவு நீண்ட கால ஆசை'' என்ருன்.

அதைக் கேட்டதும் எனக்கு இளமைக் காலத்தில் நான் கொண்டிருந்த பைத்தியக் காரத் தனமானஆசையும் அதனுல் ஏற்பட்ட விளைவும் நினைவில் முகிழ்த்தது. இளமையும் செழிப்பும் இரத்தத் துடிப்பும் நிறைதந்பருவ வயது; கிசு கிசு வென்ற வளர்ச்சித் துடிப்பு உணர்ச்சி வேகமும் மெருகூட்டின. புதுமையின் ஆட்சியும் புரட்சியின் உத்வேகமும் உள்ளத்தை அடிமை கொண்டன. இந்தப் பரபரப்பில் எனது வாழ்க்கைப் பாதையை புதிய வழியில் அமைத்துப் புதுமைகாண விளழந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன். எனது ஆசையை நிறைவேற்றப் பெற்றோரை வெறுத்தேன்; உற்றாரை உதறினேன் நல்லோர், பெரியோர் இப்படி எத்தனையோ பேர் எனக்குப் புத்திமதி புகட்டினர். போதனை செய்தனர் கேட்டேனா? கேட்பேனா? நமது பாரம்பரியத்தை உதறிவிட்டு அதன் மேலான தன்மைகளையெல்லாம் சிதறித்தள்ளிவிட்டு நான் நினைத்ததைச்செயலாக்கினேன் திருப்தியில் மூழ்கினேன். பலன் -? யாவராலும் ஒதுக்கப்பட்டேன்; விலக்கப்பட்டேன்'' பனையின் குரல்துக்கத்தால் கம்மிக் கொண்டது.

''அப்படி என்னதான் மாபெருந்தவறைச் செய்து விட்டீர்கள்? எனக்கொன்றும் விளக்கமாக இல்லையே அண்ணா?'' ஈச்சமரம் புரியாமல் விழித்தது.

அகத்திலே நம்மிடையில் ஏற்பட்ட அன்பு உனது புறக்கண்ணின் பார்வையையும் மறைத்துவிட்டதோ? இதோ! பார்! என்னை நிமிர்ந்து மேலே பார். புதிய சாதனை யாவரும் புகழக்கூடிய சாதனை என எண்ணிக் கொண்டு. நடுமரத்திலிருந்து கிளையொன்றை நீட்டி...... தேவையற்றதைச் செய்து விட்டு...... இப்போ கூனிக்குறுகி நிற்கிறேன்...... ஆனால் எனது வர்க்கத்தினர் நீண்டு உயர்ந்து நெஞ்சு நிமிர்த்தி நெடுமால் போல் காட்சியளிக்கிறார்கள்......''

'நீண்ட நாட்களாக இதைப்பற்றி உங்களிடம் கேட்கலமென நினைத்தும் உங்கள் தனிப்பட்ட சொந்தவிஷயத்தில் தலையிடுவது தவறு எனப்பேசாதிருந்தேன் என்றாலும் நீங்கள் புதியதாகத் தோற்றமளிக்க ஆசைப்பட்டீர்கள். அது நிறைவேறியதில் உங்களுக்கு மகிழ்ச்சிதானே! அதற்கேன் கவலைப்பட வேண்டும்.''

'வயதில் மட்டுமல்ல, அறிவிலும் நீதாம்பியாகத்தான் இருக்கிறாயே. நான் விரும்பியது நிறைவேறியது என்றால் போதுமா? புதியதொரு இலட்சியத்தை நிறைவேற்றி வெற்றிகாண்பதென்றால் நான் மட்டுமல்ல, பொதுமக்கள் யாருக்கும் அதனால நற்பலன் கிட்ட வேண்டும் புதிய சாதனையைப் பொதுமக்கள் அனுபவித்துப் பூரிக்கும் பொலிவைப் பார்த்து நமது கஷ்டம் மாறி ஆத்ம திருப்தி ஏற்படவேண்டும். எனது சாதனையில் யாருக்கும் பயன் கிடைக்கவில்லையே. தூரத்தில் நின்று என்னைப் பார்ப்போர் எனது தோற்றத்தைப் பார்த்து ரசித்துவிட்டு இது எதற்கும் உதவாது என முகம் சுழித்துச் செல்கின்றனர், வீடு, மண்டபங்கள் முதலியவற்றிற்கு கப்பாக, வளையாக சலாகயாக, துலாவாக இப்படி எத்தனையோ விதத்தில் ரூபத்தில் மக்களுக்கு உதவிவந்த எமது பரம்பரைப் பொதுநலத்தன்மையை மீறி நான் வெளிக் காட்சிப் பொருளாக மட்டும் மாறிவிட்டேனே''

கிளை விட்ட பனை பேச முடியாமல் துயரம் முட்டிக்கொண்டது. காற்றில் பறநதுவந்த சருகுகள் அந்த ஈச்சமரத்தைச் சுற்றிச் சரணடைந்தன.

கேவலம்; ஒரு தூசு கூட அப்பனை மரத்தைத் தீண்டவில்லை.

(17ம் பக்கத் தொடர்ச்சி)

றால் செய்யவே கூடாது. (அவர்களைக் கடவுளாலும்காப்பாற்ற முடியாது.)

இதுவரை நான் பேசியதிலிருந்து, நீங்கள் திருமணப் பொருத்தம் பார்க்கும் முறையைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். உங்களுக்குப் புரிந்ததோ இல்லையே, ஆனால் இதற்காக என்னை நீங்கள் அடிக்கடிவந்து தொந்தரவு செய்யா விட்டால் அதுவே எனக்குப் போதும்.

## தலகணி மந்திரம்

கல்யாணத்திற்குப் பின்பு தங்கள் பிள்ளைகளை கணவனை அல்லது மனைவியை மனம் மாற்றி விட்டதாகச் சில பெற்றோர்கள் சுவையான கதையாகச் செல்லுவார்கள். படுக்கையில் தலையணியில் அவர்கள் யாற்றிவிட்டார்கள் என்பர் இதற்கு தலகணி மந்திரம் என்று பெயர் சூட்டுவர். இத் தலகணி மந்திரக் கதைகள் வேடிக்கையாய் இருக்கும். இவற்றினைக் கேட்டவர்கள் எழுதியனுப்புங்கள், வாழ்க்கை தகுதியானவற்றைப் பிரசுரிக்கும்.

## அடுத்த இதழின் அலாரிப்பு!

விவாகரத்துச் சட்டத்திருத்தங்கள்
நாலுபேர் கண்ணோட்டம்
வே. வரதசுந்தரம்

பூச்சி
டொக்டர்- சரவணா

ஒரு சூரியனின் தமிழ் உலா
(சுவாமி விபுலானந்தர்)
இ. தனபாலசிங்கம்

மகப்பேற்றில் ஏன் சத்திரசிகிச்சை
(ஒரு சிந்தனைத் தகவல்)
திருமதி. சோ அன் சோ

மற்றும்
பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்
காவலூர் ராஜதுரை
ஈழத்துச் சிவானந்தன்
ஆகியோரின் ஆக்கங்களும் வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணதாசனைக் கண்டேன்



கவியரசு கண்ணதாசன்

ஈழத்துச் சிவானந்தன்

எனக்குத் தமிழில் எப்படிப்பற்றுவந்தது? யார் யார் என் தமிழ் ஆர்வத்திற்கு விதையானார்கள்? எவரைப்பார்த்து நான் தமிழைப் படிக்க விரும்பினேன். என்ற சிந்தனைகளில் சிலவேளை நான் மூழ்கிவிடுவதுண்டு.

என் தந்தையார் ஒரு சைவ சித்தாந்தி. சிறிய தந்தையர் இருவர். கதிர்காமர், இளையப்பர் என்போர். தமிழறஞர்களாய் பல ஆண்டுகள் ஆசிரியர்களுக்கு கல்விக்கூடங்களில் தமிழ் பயிற்றி பேராசிரியர்களெனப் பெருமைப்படுத்தப்பட்டவர்கள். தாய் மாமனார் செல்லத்துரையார் தமிழ்க் கல்லூரி அதிபராய் பல ஆண்டுகள் விளங்கி பலமாணவர்களுக்கு தமிழார்வத்தைத்தூண்டியவர்.

அண்ணர் சிவராமலிங்கனார் யாழ் - இந்துக் கல்லூரியில் பல ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராய்த் திகழ்ந்து பல பேராசிரியர்களுக்கு, கலாநிதிகளுக்கு, விரிவுரையாளர்களுக்கு எழுத்தாளர்களுக்கு, சொற்பொழிவாளர்களுக்கு தமிழ் தந்த தந்தையாய் மதிக்கப்படுபவர்.

பாட்டனார் பசுபதிப்பிள்ளை விதானையார் பல தமிழ் ஆங்கில சமஸ்கிருத பாடசாலைகளை நிறுவி ஒரு கலாச்சார பாரம்பரியத்திற்கு முதுகெலும்பாய் விளங்கியவர்.

இவர்கள் யாராலும் நான் தமிழ்ச்சுவை பெற்றேனில்லை. இவர்கள ஒரு மரபுவழித் தமிழாளர்களாயிருந்ததால் இவர்களுக்குப் பக்கத்தில் போக எனக்குப் பயமாய் இருந்தது என்னை அழைத்து தங்களோடு இணைத்து தமிழ் ர இவர்களும் ஏனோ ஆர்வம் காட்டவில்லை சந்தேகங்களை தீர்க்கவேண்டியபோது; சொல்லித் தந்தவைகளோடு அவர்கள் பணி முற்றுப் பெற்றது.

தந்தையார் வீட்டில் நடத்திய சைவ சித்தாந்த வகுப்பில் பல ஊர்களிலிருந்தும் குருக்கள்மார் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்று பலர் வந்து குழுமுவர். அந்த வகுப்பிலும் என் தந்தையார் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை.

பிரதிஷ்டா பூஷணம் ஐ. கைலாசநாதக்குருக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கி தந்தையாரின் இரண்டு வகுப்புகளில் பாடங் கேட்டேன். ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடை பற்றிய கேள்விக்கு நான் பதில் சொல்லாததால் அவ்வகுப்பில் இடை நிறுத்தம் செய்யப்பட்டேன்.

தந்தையாருக்கு என்னில் வெறுப்பா? இல்லை, நான் படிக்கமாட்டேன் என்ற நினைப்பா? அதுவுமில்லை. நான் குழப்படிகாரனா? இதுவுமில்லை, பின் ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை. இன்றுவரை எனக்குத் தெரியவில்லை.

கிராமத்து பள்ளிக் கூடத்திலிருந்து யாழ் இந்துக் கல்லூரிக்கு என்னை இழுத்துப் போட்டார் அண்ணர் சிவராமலிங்கனார். அங்கு தான் அண்ணர் தமிழின் அழகையும் அதன்வழி அப்பர், சித்தப்பர் தமிழின் ஆழத்தையும் என்னால் உணர முடிந்தது.

தமிழுணர்வு தலைதூக்கிய போது என்கண்கள் கண்ட புத்தகங்கள் அத்தனையும் முத்துக்கள். என் மனம் கனியக் கிடைத்த கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள எத்தனையோ இவற்றையெல்லாம் எனக்கும் என் வகுப்புக்கும் அறிமுகப்படுத்தியவர் ஏரம்ப மூர்த்தி என்ற ஆசிரியர்.

மாணவர்களிடம் ஆளுக்கு இரண்டு ரூபாவாக வாங்கிச் சேர்த்து எங்கள் வாசிப்புக்கு ருசியூட்டும் தமிழ் நூல்களை அவர் பெற்றுத்தந்தார், முதன் முதலில் திரு. வி. க. வை. பாரதியை மு. வ. வை, அ. ச. ஞா. வை, கி. வா. ஜ. வை, ரா. பி. சே.யை அகிலனை, நா. ப. வை, விந்தனை, ஜெகசிற்பியனை இன்னும் பலரை படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இந்த வாய்ப்பில் ஊறிய தமிழின்பம் வாய்க்கால் கோலி ஓடி விடாய் கொண்டபோது கண்ணுக்குக் கிடைக்கும் இதழ்களெல்லாம் தமிழின்பவாய்க்காலில் மிதக்கத் தொடங்கின.

தம்பித்துரை, பூபாலசிங்கம், கிருஷ்ணசாமி, முத்தையா பிள்ளை முதலியோரின் புத்தகசாலைகளில் தொங்கிய தமிழ்நாட்டு இதழ்கள் எங்கள் வீட்டு அலுமாரியை நிறைந்தன. நிரம்பிய இதழ்களில் தமிழோவியங்களோடு அவற்றைப்படைத்த படைப்பாளிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிமைப படங்களையும் வெளியிட்டு இதயத்திற்கு ஒருவகைக கிளர்ச்சியை ஊட்டின அன்றைய இதழ்களில் இளமை அழகோடு துடிப்போடும். எங்களைக் கவர்ந்த படைப்பாளிகள் சிலரில் கவிஞர் கண்ணதாசன் முதலிடத்தைப பிடித்துக் கொண்டார்.

அவருடைய தோற்றப் பொலிவும் தோரணைகளும் அவருடைய கவிதைகளை, கட்டுரை, கதைகளை படிககத் தூண்டின என்றும் சொலலலாம். கண்ணதாசனின தமிழ்நடை அன்று ஒரு வித்தியாசமான போக்கில நகர்வதைக் கண்டேன். திராவிட முன்னேற்றக கழக எழுத்தாளர்கள் எல்லோரும் ஒரு பாணியில எழுதிக்கொண்டிருக்க, கவிஞர் கண்ணதாசன அவர்களில் இருந்து வித்தியாசபபட்டு ஒரு நளின நடையில் தனது ஆக்கங்களை தந்து கொண்டிருந்தார்.

அவர்கள் எல்லோரும் தங்கள் தமிழ் நடைக்கு அண்ணாவே வழி காட்டி என்று கூறிய போது; கண்ணதாசன் தனது தமிழ் நடைக்கு எழுத்தாளர் தி. ஜ. ர. வே. வழிவகுத்தவர் என்று சொல்லியதோடு தனது 'கண்ணதாசன' என்ற மாத இதழிலும் எழுதியிருந்தார். கண்ணதாசனின் எழுத்துநடையின் வித்தியாசத்தை அறிஞர் அண்ணாவும் பாராட்டிப் பேசியதுண்டு.

தமிழ் நடையால் என்னைக் கவர்ந்த அறிஞர்கள் பலர் உண்டு. அவர்களைவிடக் கண்ணதாசன் என்னைக் கவ்விக்கொண்டதற்குரிய காரணத்தையும் நான் யோசிப்பதுண்டு. அன்றைய இதழ்களில் அவர் படங்களும் வெளியாகி; திரைப்படங்களிலும் அவர் திறமை பிரகாசிக்கத தொடங்க; அரசியல் துறையிலும அவர் பெயர் அடிபடத் தொடங்கியமையும் மனதைப் பீடித்துக் கொள்ள - கண்ணதாசனைக் கண்டு உரையாடவேண்டுமென்ற அளவுக்கு ஆசை மீதூர்ந்து வளர்ந்தது.

திரையுலகில் எம். ஜி. ஆர்,சிவாஜிஜெமினி, எஸ். எஸ் ஆர், கே.ஆர்.ஆர் ஆகியோர் கொடிகட்டிப்பறந்த அக்காலத்தில் எங்களூர் இளைஞர்கள் இவர்களில யாரையாவது தங்கள அபிமான நட்சத்திரங்களாய் ஏற்றிருப்பார்கள். இவர்களைச் சந்திப்பதற்காவே இந்தியா போகவேண்டு மென்று ஆசைப்படுவார்கள். இந்தியாவுக்கு அடிக்கடிபோகும் முத்தையரைக் கண்டு தங்களையும் கூட்டிக்கொண்டு போகும்படிகேட்பார்கள். கையில் காசுமிருக்காது. வீட்டில் அனுமதியும் கிடைக்காது, ஆனால் அவர்களின் ஆசைக்கு அளவுமிருக்காது. அவர்களைப் போலத்தான் நானும் கண்ணதாசனைக் காண ஆசைகொண்டேன்.

இக்காலப்பகுதியில் சைவசமயத்துறையில் ஒரு மறு மலர்ச்சிப் போக்கினை முன்னெடுத்த தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் சொற்பொழிவுத் தமிழ் என்னைக் கவர்த்துவிடவே ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதுகளில நான் தமிழகம் போகவேண்டு மென்ற தாகக்காகமானேன்.

யாழ்- இந்துக்கல்லூரி, சுன்னாகம்- ஸ்கந்தவரோதயக் கலலூரி ஆகியவற்றில் என்படிப்பை முடித்துக் கொண்டு தீவு வீட்டில் படுக்கையாய்க்கிடந்த என் அன்னைக்குப்பணிவிடைசெய்து கொண்டு தீந்தமிழ் நூல்களோடு திளைத்துக் கொண்டிருந்தேன். அன்னையின் இறப்புக்குப்பின் என்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி தமிழ் படிப்பிக்க வேண்டுமென்று மாமனார் செல்வத்துரையார் ஓர் ஆலோசனையை முன் வைத்தார். சின்னவனை எங்காவது அனுப்பிப்படிப்பிக்க வேண்டுமென்று அப்பரும் அனுமதித்தார்.

இந்தியாவில் இவனை யாரிடம் அனுப்புவது என்ற யோசனையை மாமா துரையர் எழுப்பியதும், நான் கணணதாசனிடம் போகிறேன் என்றேன்'' அண்ணனைததவிர அவர்களயாருக்கும் கண்ணதாசன யார் என்று தெரியாது. இவன யாரைச் சொல்லுகிறான் எனறு அப்பர்கேட்டார். அறிஞர் அண்ணாத்துரையோடு இருக்கிற கண்ணதாசனைச் சொல்லுகிறான் எனறார் அண்ணன்.

அப்பர் கையில் வைத்திருந்த பொல்லால் எட்டி விசுககினார் அண்ணா தனது கையால் அதைபபிடிததுவிட்டார். என்தலை தப்பியது தம்பிரான் புண்ணியம. தலைபோனாலும் கண்ணதாசனைக் காண வேணடும் என்பதுதானே என் தலையாய விருப்பம். அநதக்காலத்தில் அறிஞர் அண்ணாவின் பெயரை எங்கள வீட்டில் உச்சரிககக் கூடாது- காரணம் அவர் அரசியல் அலல. அவர் கடவுள் மறுப்பாளர் எதிர்ப்பாளர் என்பதே, காமராஜர், ராஜாஜியைப்பற்றி எவ்வளவும் பேசலாம். எங்களூர் மக்களும் இத்தகைய மனோபாவம் கொணடவர்களாகவே இருந்தனர்.

பட்டணம் போகும் போது தந்தையார் கல்கி இதழ்களை வாங்கிவருவார். அதன ஆசிரியர் ராஜாஜி எனறே எலலோருக்கும் சொலலுவார். ராஜாஜி கடவுளைப் பற்றி எழுதியதால் கல்கி ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்ததியின பெயர் என் தந்தையாருக்கு முககியமற்றதாகிவிட்டது. என்தந்தையாரிடம் காசு வாங்கவேண்டுமானால் ராஜாஜியைப்பற்றி புழுக வேணடும். அண்ணர் இந்தக்கலையில் குருசில். யாழ்- இநதுக் கல்லூரி நூலகத்தில் ராஜாஜியைப் பற்றி புததகங்கள் இருந்தால் எடுத்துப்படித்துவிட்டு ஊருக்குவநது அப்பருக்கு ராஜாஜியைப் பற்றி நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தி மகிழ்வித்து விடுவார். எங்கள அப்பர் ஒரு சிததமருத்துவர். யாராவது மருந்து செய்யக் காசு கொடுத்திருந்தால் அதை அண்ணருக்குத்தூக்கிக் கொடுததுவிடுவார். இந்த நன்றிக்காக அண்ணர் தன் மூத்தமகனுக்கு ராஜாஜி என்று பெயரும் வைத்தார். நான் கண்ணதாசனைப்பற்றியாருக்குச் சொலலுவது?

வீட்டிலும் சொல்ல முடியாது. மேடையிலும் அவரைபபற்றி பேசமுடியாது இதற்குரிய காரணம் அவர் தி. மு. க. காரர் என்பதிலலை. கடவுளை நிந்திக்கிற நிரூச்சுரவாதி- நாததிகர் என்பதே. எங்களூர் தமிழறிஞர்களான- இந்தியா சென்று வித்துவான்களான சி. ஆறுமுகனாரும், பொன். கனகசபையாரும் கண்ணதாசனைப்பற்றி பேசவிரும்பினார்கள் சமுதாயத்திற்குப பயந்து பிற்காலகவிதைவளர்ச்சியை, பாரதியோடு மட்டுப்படுத்திவிட்டார்கள.

கண்ணதாசன் நாத்திகர் என்பதால் அவருடைய ஆளுமைகள் எங்கள் பகுதியில் தடைப்பட்டேயிருந்தது. இதற்கு கண்ணதாசனே தீர்வு காணவேண்டும். அவர் சுவாமி கும்பிடும் ஆஸ்திகராக வேணடும். அப்பொழுதுதான் அவர் எழுத்துக்களை எங்கள வீடுகளுக்குக் கொண்டுபோகலாம். அவரைப்பற்றிக் கதைக்கலாம் நான் எனது பிரார்த்தனையின் போது கடவுளே கண்ணதாசனை உன்கட்சியில் சேர்த்துவிடு என்றும் பிரார்தித்திருக்கிறேன். பிற்காலத்தில்அவர் ஓர் ஆத்திகவாதியாக மாறியதற்கு என்போன்றோர்களின் பிரார்த்தனையும் காரணைமாய் இருந்திருக்கலாமென்று எண்ணுகின்றேன்.

மாலை நேரத்தில் எங்களூர் கிராஞ்சியம் பதிவளாகம் மந்தகாச மயக்கத்தில் மிதக்கும் இளைஞர்கள் குளக்கரையில் இருந்து குதூகலிக்கவும், இரண்டு

(23ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் பொது நூலகம்



# ஒரு பெண்ணின் கதை....!

**வித்துவான் வேலன்**

காதல் காதலர், லவ்வர்ஸ் மிக மிக மலிவான வார்த்தைகள் அது மலிந்தாலும் அதன் உண்மையான பெறுமதி மலியவில்லையே, மலியுமா?

அவர்கள் இனிய காதலர்கள்: அவன் காவல்புரி வீரன்; நாடுகாக்கக் களம் நோக்கிப் போய்விட்டான். அவனுடன் மற்றும் பல இளைஞரும் சென்று விட்டனர்.

அந்தோ அவன் போர்க்களத்தில் வீரப்போர் புரிந்து உயிர் துறந்த செய்தி வந்தது. காதலி துடி துடித்துப் போனாள்: ஓடிவந்தாள் களம் நோக்கி; காதலன் உடலே தழுவக் கிடைத்தது.

என் அன்பனே, இவ்வளவு காலமும் எனக்காக வருந்தினாய்; என்னை வாழவைக்கப போர்க்களம் போனாய் உன்னை மிக மிக வருத்திவிட்டேன் இனி எனக்காக நீ வருந்த வேண்டாம், உன்னோடு போர் புரிய வந்த மற்றவர் வாழ, நீயோ, இவளோடு கூடி வாழேன்; மகிழேன் என வெறுத்தான் போல உயிர் துறந்து விட்டாய். மூங்கில் சணுக்களை மூடி நிற்கும் பொதி கழன்றது போல உன் பிரிவால் என் கைவளை கழல நிற்கின்றேன். வளையற்ற என் கைகளை உயர்த்திக் காட்டித் துடிதுடித்து நிற்கின்றேன் இனி, நம் சுற்றத்தாரிடம் என்ன சொல்வேன், என் மாமன் மாமியர்க்கு என்ன சொல்வேன். அதனை நீ எனக்குச் சொல்வாயாக.

என் அன்பனே போர்முடிந்து எல்லாரும் போய் விட்டனர். நீ ஏன் அவரோடு போகவில்லை. உன்னைத் தேடிவந்த என்னால் உன்னை எடுக்கமுடியவில்லையே; உன் பொன்னுடல் மண்பட்டுக் கிடக்கின்றதே. ஆல் பழுத்தால் வரும் பறவையினம் போன்ற சுற்றத்தார் ஒருவரும் இன்று இல்லையே.

என் மகன் மாவீரன் எனப் பெருமைப்பட்ட நின் அன்னைக்கு நான் என்ன சொல்வேன், அவளை எங்ஙனம் ஆற்றுவேன்.

அன்பனே. ஐயோ என்று கவலை தீரக் கதறவும் முடியவில்லையே. அணைத்து உன்னைத் தூக்கிச் செல்வோமென்றால் உன் அகன்ற மார்பை எடுக்கும் வல்லமை எனக்கில்லையே; இது என்ன கொடுமை இதனைச் செய்த கூற்றமும் என் போல் பெருந் துயரால் வருந்தட்டும் அன்பனே, என் முன் கையைப் பற்றி எழுந்து நடந்து வருக அந்த மர நிழல் வரை வருக; என் அன்பே எழுந்து வருக.

கலம் செய்கோவே! கலம் செய்கோவே!! மட்பானை செய்யும் பெரியோய்! மட்பானை செய்யும் பெரியோய்! என் அன்பனை இடும் தாழியை வனையும் பெரியோய்! அதனை இன்னும் சிறிது பெரிதாக வனைவாயாக. என் அன்பனோடு நான் வாழ்ந்த வாழ்வு எத்தகையது! அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய சிறுவெண் பல்லி போல வாழ்ந்தேனே.

வண்டிச் சக்கரத்தில் பொருந்திய பல்லி, சக்கரத்தோடு சேர்ந்து சுழன்று, சுழன்று மேடு பள்ளமெல்லாம் சுற்றுவது போல எனக்கென ஒரு வாழ்வு எனக்கென ஒரு இன்பம்; ஒரு துன்பம் என்றில்லாமல் வாழ் நாள் முழுவதும் என் அன்பனோடு வாழ்வின் மேடு, பள்ள மெல்லாம் சக்கரத்துப் பல்லி போலச் சுற்றி சுற்றி வந்தேனே; அவனில்லாமல் இனி எங்ஙனம் வாழ்வேன், ஆதலால் கலஞ் செய் கோவே நீ செய்யும் தாழியுள் அவனோடு நானும் இடம் பெற அதனை இன்னும் சிறிது அகலிதாக வனைவாயாக!

அந்தக் கையற்ற வாழ்க்கையைக் காட்டும் நெஞ்சைப் பிழியும் கவிதை இதோ!

''கலம் செய் கோவே! கலம் செய்கோவே
அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய
சிறுவெண்பல்லி போலத் தன்னொடு
சுரம் பல வந்த எமக்கும் அருளி
வியன்மலர் அகன் பொழில் ஈமத்தாழி
அகலிது ஆக வனைமோ
நனந்தலை மூதூர்க் கலம்செயகோவே

---

எழுத்தாள நண்பர்களே!

நேரில் வரவே நினைக்கின்றேன்
முகவரி தெரியாமல் முழிக்கின்றேன்
எங்கிருந்தாலும் எழுதியனுப்புங்கள்
'வாழ்க்கை' நம்முடையதல்லவா.

- சிறப்பாசிரியர்

---

(20ம் பக்க தொடர்ச்சி)

கோயில்களுக்கு மிடையில் ஓடிப்பிடித்து விளையாடவும்; இளைஞர் கழக மண்டபத்தில் பத்திரிகைகள் படிக்கவும் ஒன்று சேருவார்கள், இவர்களுக்கு கண்ணதாசனைப்பற்றி கதைகதையாய்ச் சொல்லுவேன். அப்போது வெளியாகியிருந்த கதை, கட்டுரை, கவிதை என்னும் கண்ணதாசனின் முத்தொகுதி நூல் ஒன்று என்கையில் இருக்கும். படிக்க விரும்பியவர்களுக்கு படிக்கவும் கொடுப்பேன்.

அப்பொழுது அடிக்கடி இந்தியா போய்வரும் முத்தையா என்பவர் (இந்திய இசைதிரைக்கலைஞர்களை இங்கு அழைத்து வருபவர்) ''சிவானந்தன் இந்தியாவுக்குப் போகாமலே இந்தியாவைப் பற்றியும், இந்தியர்களைக்காணாமலே இந்தியர்களைப்பற்றியும் பேசக்கூடிய புத்திசாலி'' என்று கிண்டல் செய்வார். ''அம்மான் நான் இந்தியர்களைப்பற்றி பேசவில்லை. அதற்காக இந்தியாவுக்குப் போகத்தான் வேண்டும் நான் பேசுவது கண்ணதாசனைப்பற்றி கண்ணதாசனைக்காணாமலேயே கண்ணதாசனைப் பற்றிப் பேசலாம் என்பது உங்களுக்குத் தெரியாது''? என்று அவரை மடக்குவேன்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழன் உங்களுக்குத் தோழனா?

(வியாழ மாற்றமும் அதன் பலனும்)

"சோதிட சிந்தாமணி" சு. விவேகானந்தன் F.I.A [J.P]

இதுவரை காலமும் சிங்கராசியில் சஞ்சரித்து வந்த வியாழ பகவான் 4.9.92ல் கன்னி ராசிக்கு மாறிச் செல்லுகிறார், இது ஒரு வருடம் சிங்க சஞ்சரிக்கும் காலத்தில் இது உலகுக்கும் உங்களுக்கும் என்ன என்ன நன்மை தீமைகளைச் செய்வார் என்பதை ஆராய்ந்து உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

சென்ற ஆண்டைவிட இந்த மாற்றம் நன்மை என்றே சொல்ல வேண்டும். காரணம் - சூரியன் வீட்டில் எந்தக் கிரகங்களும் பெலம் பெறுவதில்லை. ஆனால் இதுகளைச் சிந்திக்காது வியாழ மாற்றப் பலன்களை சகலரும் எழுதுகிறார்கள். அதன்படி நடப்பதில்லை. சகல சோதிடர்களும் 2,5,7,9ல் வியாழன் வரும்போது நல்ல பலனையே செய்யும் என்று எழுதுகிறார்கள். ஆனால் அது அப்படியில்லை. வியாழ பகவான் அந்த அந்த ராசிக்காரர்களுக்கு நல்லவனா? கெட்டவனா? என்றதைக் கருத்தில் கொண்டுதான் பார்க்கவேண்டும். குரு பார்வை கோடி நன்மை என்று சொல்லுவார்கள். அதேபோல அந்த ராசிகளை நோக்குவதையும் பார்த்துதான் பலனகளை அறியவேண்டும். இதுகளை விட்டுவிட்டு வியாழ மாற்ற பலன்களை பலர் பலவிதமாகவும் எழுதுகிறார்கள். ஆகவே எதை நம்புவது என்பது தெரியாமலிருக்கிறார்கள். அதனால் சோதிடத்திலுள்ள நம்பிக்கையையும் இழக்கவேண்டியதாயிருக்கிறது. ஆகவே சகல பலாபலன்களை கீழே தருகிறேன்.

## பொதுப்பலன்

இந்த வியாழமாற்றத்தால் உலகரங்கில் சில நன்மைகள் நிகழலாம் ஆனால் யுத்தம் இரத்த பெருக்கு இதுகள் குறையும் உலகத்திலுள்ள நாடுகள் ஒன்று சேரவும் பிடிவாதப்போக்கிலுள்ள நாடு விட்டுக் கொடுக்கும் நிலையும் உண்டாகிறதான பலன் இந்த மாற்றத்தால் கூடிய நன்மைகளைக் காணக் கூடியதாயிருக்கும். பெரியவல்லரசு நாடு இரண்டுக்கும் இடையில் யுத்தநிலை தோன்றும் தன்மையும் உண்டாகலாம். இதன்படி இம்மாற்றத்தில் வருஷதொடக்கத்தில் நல்ல பலனைக்கொடுத்து தான் போகும்.

## பொதுப்பலன் ராசிவாரியாக

### மேடம்

இவ்விராசிக்காரர்களுக்கு வியாழ பகாவான் 6க்கு செல்லுகிறார் 6ம் வீடு சத்துரு ஸ்தானம் எனப்படும் ஆகவே தேவையற்ற தொல்லைகளும் மனதில் ஒருவகைக் குழப்பத்தையும் உண்டு பண்ணும். ஆகவே எதிலும் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் 15.4.93ன் பின் நல்லபலனைக் கொடுக்கும். நினைத்தவைகள் அனைத்தும் அப்போது செய்துமுடிக்கலாம். அதுவரையும் எதிலும் பொறுமையுடனிருக்கவும். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல்களில் மிகவும் கவனத்துடனேயே நடந்துகொள்ள வேண்டும். புதியதாக எதையும் செய்யாதிர்கள் திசை புத்தி நன்கு அமைந்திருந்தால் எதையும் செய்யலாம் உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு மிகவும் கவனத்துடன் நடந்து கொள்ளவும் எதிர்பார்த்தவை தடையும் தேவையற்ற இட மாற்றமும் கொடுக்கும் பலன். காதலர்கள் மிகவும் நிதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும். ஒரு சிலருக்கு காதல் முறிவுண்டு.

### இடபம்

இவ் விராசிக்காரர்களுக்கு வியாழபகவான் 5க்குச் செல்லுகிறார். அதனால் சென்ற ஆண்டைவிட நல்ல வித பலனைக் கொடுக்கும் ராசிநாதனுக்கு லாபாதி என்பதுடன் 11ம் வீட்டை வியாழன் நோக்குவதும் நல்ல பலனையே கொடுக்கும் எதிலும் நல்ல தன்மையும் இதுவரை தடைப்பட்டுக்கிடந்தவைகள் அனைத்தும் சரியாகக்கூடியதான பலன் தொழில் நிலையில் தேங்கிக்கிடந்தவைகள் சரிவரவும் கொடுக்கல் வாங்கல்களில் நல்ல தன்மையுண்டாகும் பல புதிய தொழில் எதுவும் செய்யலாம். பங்குத் தொழில் எதுவும் செய்யலாம் உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு பதவி உயர்வும் நினைத்தவைகள் அனைத்தும் சரிவரக்கூடியதான பலன். நல்ல இட மாற்றத்தையும் கொடுக்கும் பலன். கல்வியில் முன்னேற்றத்தைக் கொடுக்கும். காதலர்களுக்கு புதிய சூழ்நிலையும் திறமான தன்மைகளும் உண்டாகிற தானபலன். திருமணத்தை இது காலத்தில் கொடுக்கவும் பலன் உண்டு.

### மிதுனம்

இவ்விராசிக்காரர்களுக்கு வியாழ பகாவான் 4க்குச் செல்வதினால் நல்ல விதபலனைக் கொடுக்கும். முன்னிருந்த தொழில் நிலையில் புதியமாற்றம் உண்டாகும். தொழில் நிலையில் நல்ல தன்மையமையும். பலன். எண்ணியவைகளை இதில் செய்துமுடிக்கவும் எதையும் நன்கு அமைக்கும் பலனுமுண்டு. வியாபாரிமார் தொழில் நிலையில் நல்ல தன்மை அமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குத்தொழில் செய்வோர் மிகவும் நிதானம் தேவை. உத்தியோகத்திலுள்ளவர்கள் சில மாற்றத்தை எதிர்பார்க்கலாம். நல்ல சூழ்நிலையில் உத்தியோகத்தைக் கொண்டு போய்விடும். காதலர்களுக்கு தடைப்பட்ட திருமணம் நடைபெறும் மாணவர்களுக்கு கல்வியில் நல்ல தன்மை தென்படும் தடைப்பட்டவைகள் அனைத்தும் சரிவரக்கூடியதான பலன் ஒரு சிலர் வெளி நாடு செல்லும் பலனுண்டு.

## கடகம்

இவ்விராசிக்காரர்களுக்கு வியாழ பகவான் மூன்றாம் வீட்டிற்குச் சென்றிருப்பதினால் நல்ல பலனையே எதிர்பார்க்கலாம். ராசி நாதனுக்கு 9ம் அதிபதியாகி வியாழன் 9ம் வீட்டை நோக்குவதினால் நல்ல வித பலனையே கொடுப்பார். எதிர்பார்த்தவைகள் தடைபடாமல் சரிவரவும் எதிலும் ஒரு முடிவுண்டாகக் கூடிய தானபலன் சகல நிலையிலும் இதுகாலத்தில் நன்மை செய்து விட்டுத்தான் போகும். வியாபாரிகளுக்கு இதில் நல்ல நன்மையும் பொருளாதாரம் நன்கு இருக்கும். பங்குத் தொழிலில் பிரச்சினைகளைக் கொடுக்கும் பலன், ஆகவே தனிமையில் செய்யுங்கள். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு உயர்ச்சியுண்டாகும் பலன்; இடமாற்றமும் ஏற்படும் பலனும் உண்டு, காதலர்களுக்கு நல்லவித பலனும் நினைத்தவைகள் சரிவருதலும் உணடு இதில் திருமணம் தடையுண்டாகும் பலன்.

## சிங்கம்

இவ்விராசிக்காரர்களுக்கு வியாழபகவான் இரண்டாம் வீட்டிற்குச் செல்லுகிறது. இதில் நல்ல விதமான பலனைக் கொடுக்கும். முன்னிருந்த பணக்கஷ்டம் குறைந்து நல்லதன்மையுண்டுபண்ணும் தொழில் நிலையில் நல்ல தன்மையை உண்டுபண்ணவும் புதிய தொழில் செய்யவும் பலன். வியாபாரிகளுக்கு நல்ல தன்மையும் பழைய கொடுக்கல் வாங்கல் வசூலிக்கவும் திறமானதாயிருக்கவும் பலன் உண்டு உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு நல்ல சூழ்நிலையில் உத்தியோக உயர்வுண்டு சிலர் கொலசிப்பில் வெளிநாடு செல்லும் பலனுண்டு. காதலர்களுக்கு விவாகத்தைக் கொடுக்கும் பலன் புதிய காதல் தோன்றக் கூடியதான பலன், மாணவர்களுக்கு நல்ல கல்வியுண்டு பரீட்சையில் சித்தியடையும் பலன் ஒரு சிலருக்கு வெளிநாட்டுப் பயணமுண்டு.

## கன்னி

இவ்விராசிக்காரர்களுக்கு வியாழ பகவான் ஜென்மத்திற்கு செல்லுகிறார், இதுவரை 12ல் இருந்து தீமைகளைச் செய்த வியாழ பகாவான் இனிமேல் ஓரளவு நல்ல பலனைக் கொடுப்பார். இதுவரையிலிருந்து வந்த தொழில் நஷ்டம் நன்குண்டாகவும். புதிய சூழ்நிலையை உருவாக்கவும் பலன் உண்டு. வியாபாரிகளுக்கு நஷ்டமடைந்தவை லாபத்தைப் பெறவும் பலன் உண்டு எதிர்ப்புகளுக்கு இடையில் இருந்த சில காரியங்கள் நன்மையடையவும் பலனுண்டு. குடும்பத்தில் இதுவரை இருந்த பிணக்குகள் நன்கு வரவும் தப்பபிப்பிராயப் பட்டவைகள் இனிமேல் நல்ல நிலைக்கு கொண்டு வரவும் பலன் உண்டு. உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு சில தொல்லைகள் உண்டாகும். வீண்பிரச்சனை வரலாம் மிகவும் கவனம் தேவை. காதலர்களுக்கு நல்லவித பலனுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டு.

## துலாம்

இவ்விராசிக்காரர்களுக்கு வியாழபகாவான் 12ல் சஞ்சரிக்கிறார். அதனால் இது ராசி நாதனுக்கு வியாழன் நல்லவனில்லை ஆகவே 12ல் மறைவது நல்லதென்றே சொல்ல வேண்டும். கடந்தகாலத்தைவிட நல்லவித பலனை எதிர்பார்க்க முடியும். தொழில் நிலையில் நல்லதன்மையிருக்கும். தொழில் மாற்றம் உண்டு செய்யும் எந்தக்காரியமும் நல்லதாயிருக்கும். வியாபாரிகள் தொல்லையிலிருந்து விடுபடும் பலன் உத்தியோகத்திலுள்ளவர்கள் சில வேதனையான நிலைக்கு ஆளாகக்கூடியதான நிலைக்குள்ளாவர் கவனம் தேவை காதலர்களுக்கு புதிய காதலுண்டாகவும் ஒரு சிலருக்கு காதல் முறிவுண்டாகவும் பலன் உண்டு. மாணவர்களுக்கு வெளிநாட்டில் கல்வியைத் தொடரவும் பலனுண்டு.

## விருச்சிகம்

இவ்விராசிக்காரர்களுக்கு 11ம் வீட்டிற்கு செல்லுவதினால் நல்லவித பலனைக் கொடுக்கும் பலனுண்டு. இதுவரையும் 10ம் வீட்டில் இருந்து சில தொல்லைகளைக் கொடுப்பதுடன் பல மாற்றங்களையும் கொடுத்து இனிப் புதிய சூழ்நிலைக்கு கொண்டு போகிறதான பலனுண்டு. பல கஷ்டங்களை சென்ற ஆண்டுகளில் கொடுத்து இப்போது தான் சில நல்ல தன்மைக்குரியிடமான லாபாதி வீட்டிற்குச் செல்வதினால் இது காலத்தில் நல்ல தன்மையே கொடுக்கும் பலன். வியாபாரிமார்களுக்கு இதில நல்ல விதமான பலனைக் கொடுக்கும் புதிய தொழில் ஆரம்பிக்கக்கூடியதான பலன் உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு நல்லவித பலனையுண்டுபண்ணும், உயர்ச்சியுண்டு. காதலர்களுக்கு தடைப்பட்டவைகள் அனைத்தும் சரிவரக்கூடியதான பலன் உண்டு. மாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களுக்கு திறமான பலன் பரீட்சையில் சித்தியடையும் பலன் உண்டு.

## தனுசு

இவ்விராசிக்காரர்களுக்கு வியாழ பகவான் 10ம் இடத்திற்குச் செல்லுகிறார். இதில் போட்டித் தன்மையும் தொழில் நிலைகளில் தொல்லைகளும் உண்டாகும், கவனம் தேவை. 7 1/2 சனியும் கடைசி என்பதினால் 15.3.93 க்குப் பின் ஓரளவு நல்ல வித பலனுண்டு. அதுவரையும் எதிலும் தலையிடாமலிருக்கவும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு முன்னிருந்த தடைகள் நீங்கி நல்ல தன்மையுண்டாகப் பலன். ஒருசிலர் உத்தியோகத்தை விடவேண்டிய நிலை ஏற்படலாம் ஆகவே மிகவும் கவனம் தேவை. காதலர்களுக்கு நல்லவிதமான பலனுண்டு. புதிய காதலர்களுக்கு சோதனையான காலம். மாணவர்களுக்கு பரீட்சையில் சித்தியடையவும் வேறுசிலர் வெளிநாடு செல்லவும் பலனுண்டு. எதையும் இதில் நடைமுறைப்படுத்தலாம்.

## மகரம்

இவ்விராசிக்காரர்களுக்கு இதுவரையும் அட்டமத்தில் நின்ற வியாழபகவான் 9இற்கு செல்லுகிறது. இதினால் முன்னிருந்த பிரச்சினைகள் நீங்கி நல்லவிதமான பலனைக்கொடுக்கும் தொழில் செய்வோர் சகல நிலையிலும் வெளிச்சம் உண்டாகவும் புதியதான நிலையை உருவாக்கவும் பலன் உண்டு. பங்குத் தொழில் செய்வோர் மிகவும் கவனித்து நடக்கவும். கொடுக்கல் வாங்கல்களிலுள்ள சிக்கல்கள் தீரக்கூடியதான பலன் புதிய தொழில் தொடங்குவோர் 3மாதம் வரையும் பொறுமையுடனிருக்கவும். வெளிநாடு செல்வோர் இதில் வெளிநாடு செல்லலாம் உத்தியோகத்தர்களுக்கு சிரமங்கள் நீங்கி நல்ல தன்மையையும் சிறப்பைக்கொடுக்கும் பலன் உண்டு காதலர்களுக்கு திருமணத்தில் முடியும் மாணவர்களுக்கு பரீட்சையில் சித்தியும் நல்ல தன்மையும் அமையும்.

## கும்பம்

இவ்விராசிக்காரர்களுக்கு இதுவரை 7ல் நின்ற வியாழ பகவான் 8இற்குச் செல்லுவதினால் இதில் பல சிரமங்களைக் கொடுப்பார் வீண் தொல்லைகளும் தேவையற்ற செலவுகளையும் கொடுக்கும் பலன் உண்டு. வாழ்க்கையில் பல சிரமங்களை இதில் அனுபவிக்கும் பலன் புதிய தொழில் எதுவும் தொடங்கக் கூடாது. வியாபாரிமார்களுக்கு பல சிரமங்களுண்டாகும். சொன்னபடி எதையும் செய்ய முடியாத நிலையை உண்டுபண்ணும் மிகவும் எதிலும் பொறுமை தேவை, வெளிநாட்டில் இருக்கும் இன ஜனங்களின் கொண்டாட்டம் உண்டு. உத்தியோகத்திலுள்ளோர் மிகவும் நிதானத்துடன் நடந்துகொள்ளவேண்டும். மாற்றம்வந்தாலும் எடுக்காதீர்கள். காதலர்களுக்கு தொல்லையான நிலையுண்டு. எதிர்ப்புகள் கரைச்சலுண்டு. மாணவர்களுக்கு பரீட்சையில் தடையும் தொல்லையும் உண்டாகும் பலன். இதில் பரீட்சையைத் தள்ளிப்போடவும்.

## மீனம்

இவ்விராசிக்காரர்களுக்கு இதுவரையும் 6ல் இருந்த வியாழபகவான் 7இற்குச் செல்லுகிறார். இதில் தடைப்பட்டவைகள் அனைத்தும் சரிவரக் கூடியதான பலன் இதில் தனிப்பட்ட திருமணங்கள் நடைபெறக் கூடியதான பலன். தொழில் செய்வோர் நல்ல தன்மையை அடைவர். புதிய தொழிலை ஒரு சிலர் ஆரம்பிக்கக் கூடியதான பலன் உண்டு. வியாபாரிகளுக்கு இது மாற்றத்தின் பின் நல்ல தன்மையுண்டுபண்ணும் உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு உயர்வும் மாற்றமும் உண்டாகிறதான பலன் வாழ்க்கையில் இனிமேல் நல்லவித பலனையுண்டு பண்ணும். காதலர்களுக்கு தடைப்பட்ட திருமணம் நடைபெறக் கூடியதான பலன் மாணவர்களுக்கு தடைப்பட்ட கல்வியுண்டாகும் வெளிநாடு செல்லும் வாய்ப்புண்டு.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழ் சினிமா வளர....!

- காவலூர் ராஜதுரை

சுமார் கால் நூற்றாண்டு கால முயற்சிகளுக்குப் பிறகு. தொலைக்காட்சியும், வீடியோவும், கலாசார உலகை ஆக்கிரமித்ததையும், தமிழர்கள் தாம் பிறந்த மண்ணிலேயே அநாதைகளாக்கப்பட்டதையும் அடுத்து, இலங்கையில் தமிழ் சினிமாப்படம் தயாரிப்பதைப் பற்றி எவரும் மூச்சுக்கூட விடுவதில்லை.

ஆயினும் முன்னெப்போதையும் விட இப்போது ஆன் இலங்கையில் தமிழ் சினிமா தயாரிப்பதற்கான காலம் கனிந்திருக்கிறதென்பது இக் கட்டுரையாளரின் கருத்தாகும் இதற்கான காரணங்களை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

சிங்களப் பேரினவாத வெறியர்களின் தயவால் இலங்கைத் தமிழர்கள் உலகமெலாம் தமிழோசை பரவச் செய்து வருகிறார்கள். பிறந்த மண்ணைப் பிரிந்து வாழும் இவர்களிற் பெரும்பாலானோருக்கு வருவாயும் ஓய்வும் அதிகமென அறிகிறோம். அனேகர் 'ஆடுநர் பாடுநராகிக்களிக்கின்றாரன்றிக் கவல்கின்றாரில்லை, எனவும் அறிகிறோம். இதனாலே தான் போலும் நம்நாட்டு ஜனரஞ்சகக் கலைஞர்கள் பலர் இப் புலம்பெயர்ந்தோரின் அழைப்பின் பேரில் உலகம் சுற்றிக் கலைப் பாலங்கள் கட்டி, வருகிறார்கள். புலம்பெயர்ந்தவர்கள் சொந்த மண்ணில் வாழ்ந்த காலை உதாசீனம் செய்த கலைமுயற்சிகளுக்கெல்லாம் இப்பொழுது பெரும் 'மவுசு' ஏற்பட்டிருக்கிறது. எனினும் புலம்பெயர்ந்து உலகின் பெரு நகரங்களில் வாழும் நம்மவர்கள் அந்த நகரங்களிலெல்லாம் தமிழ்ப் பண்பாட்டையும் பாரம்பரியங்களையும் பரப்புகிறார்கள் என நாம் ஏமாறிவிடலாகாது. அவர்கள் மறைவாகத் தமக்குள்ளே பழங்கதைகள் பேசுகிறார்கள் என்பதை நாம் மறந்து விடலாகாது.

ஆயினும் இவர்களிடம் பணவசதி இருக்கிறது. நவீன தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புகளும் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, 'அப்பன் செத்தால் தான் அப்பன் அருமை தெரியும்' என்பது போல, சொந்த மண்ணை விட்டுப் பெயர்ந்த பின்னர் தான் அதன் பாரம்பரியங்களின் அருமையை உணர்கிறார்கள். இது ஆரோக்கியமான ஒரு தாகம். இந்தத் தாகத்தைத் தணிப்பது இங்கு சொந்த மண்ணில் எஞ்சியிருக்கும் படைப் பாளிகளின் தலையாய கடமை. (அதே போல புலம் பெயர்ந்து வாழும் எழுத்தாளர்கள், கலைஞர்களும் தாம் வாழும் நாடுகளின் கலாசாரப்பின்னணியில் தமிழ்க் கலை, இலக்கிய முயற்சிகளை மேற் கொண்டால் தமிழ் இலக்கியப் பரப்பின் ஆழமும் அகலமும் விரிவடையும்). இதனைச் செய்யத் தவறினோமானால் இளய



தலைமுறையினர் ஒலி- ஒளிக் கூத்தும், பாட்டுக்குப் பாட்டுமே எமது பண்பாடென. மயங்குவர்.

இங்குதான் இலங்கைத் தமிழச் சினிமாவினை உயிர்ப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆரம்ப காலச் சினிமா முயற்சிகள் தென் இந்திய மரபையொட்டி மேற் கொள்ளப்பட்ட போதிலும் காலக் கிரமத்தில் இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுவதும் பேணுவதும் அவசியமென்பது உணரப்படலாயிற்று. இதற்குச் சான்றாக 'குத்துவிளக்கு' 'வாடைக் காற்று' 'பொன் மணி' போன்ற படங்கள் அமைந்தன. (இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றியவரும் தற்போது கனடாவில் வாழ்ந்து வருபவருமாகிய பி. விக்னேஸ்வரன் அவர்கள் டொரன்டோவில் இம் மூன்று படங்களையும் காண்பிக்க முயன்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்). இன்றைய காலகட்டத்தில் மேற்படி படங்களின் அணுகு முறையைப் பின் பற்றி, சர்வதேச தராதரத்துக்கு அமைவாகப் படங்கள் தயாரிக்கப்படும் பட்சத்தில் இலங்கைத் தமிழ்ச் சினிமா ஆரோக்கியமாக வளர்ச்சி பெறுமென்பது திண்ணம். சிங்களப் படங்களும் தொலைக் காட்சி நாடகங்களும் வெற்றி பெற்று வருவதற்கு இந்த அணுகுமுறையே காரணமென்பதும் நாம் மனங்கொள்ள வேண்டிய தொன்று.

எண்ணக் கரு வடிவில் சரியாகத் தோன்றும் இந்த யோசினையை நடைமுறைப்படுத்துவது எங்ஙனம்?

ஏனைய கலைமுயற்சிகளைப் போலவன்றிப் பெருந் தொகைப் பணத்தை முதலிட்டு மேற்கொள்ள வேண்டிய பணி இது. எனவே முதலீட்டுக்கு எங்கே போவது என்பது எமது முதலாவது பிரச்சினை.

இது பற்றிய எனது யோசனைகளை அடுத்த இதழில் இருந்து எழுதுகிறேன். இத்துறை சார்ந்த அறிஞர்களின் கருத்துக்களையும் எதிர்பார்க்கிறேன். அக்கருத்துக்களை எனது கட்டுரையில் பெயர்களோடு வெளியிடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாழ்க்கை

VAARLLZKHAI)

உண்மை நேர்மை கடமை - இவையே வாழ்வின் தலைமை

குமிழ்-1 புரட்டாசி 1992


## எண்பது கண்ட எம்மவர்



தலைவர் தொண்டமான்

தேவை உணர்பவர்
சேவை செய்பவர்
வாய்மை கொண்டவர்
வாழ்க்கை வானிலும்
அரசியல் வானிலும்
தலைமை கண்டவர்
எம்மவரானவர்
ஏற்றமுற்றவர்
எங்கும் நிலைத்தவர்
வந்த காலத்தால்
வயது தான் எண்பது
வாலிபம் எழுகவே!


சிவகங்கா வெளியீடு

SIVAGANGA PUBLICATIONS

98, விவேகானந்த மேடு,
கொழும்பு - 13.

விவேகானந்தாமேடு 98ம் இலக்கத்திலுள்ள சிவகங்கா வெளியீட்டினருக்காக வழக்கறிஞர் ப. கதிரவேலு J. P. U. M. அவர்களால் சங்கர் சன்ஸ் பிறின்டஸ் 98, விவேகானந்தா மேடு, கொழும்பு-13ல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாழ்க்கை' அறிவு தருக
வாழ்க்கை அன்பு தருக
வாழ்க்கை மகிழ்வு தருக

'வாழ்க்கை' இதழ் எங்களை
வாழவைக்க வாழ்த்துகிறோம்.

# SARAVANAS TRADING COMPANY

**61, 4th Cross Street, COLOMBO-11.**

T'grams: THILLAI Phone: 27437

Branch:-

**SARAVANAS TRADING COMPANY**

No. 2, Andrew's Drive Road, NUWARA-ELIYA.
T. P. 052-2768

வாழ்க்கையே வேராய் நீயிருக்க
நீராய் நாமிருப்போம்

நீ வளர! வளர!
நாங்கள் உயர உயர!

ஓ! அந்த இணைப்பின்
இங்கிதம் இப்பொழுதே புரிகிறது!

# A. M. T. Transport Service

(A. M. THANANAYAGAM)
Customs Clearing & Forwarding Agents and Govt. Transport Contractors

Head Office
**A. M. T- TRANSPORT SERVICE,**
46 1/2, 3rd Cross Street,
Colombo-11.
Tel. *433391*,

Branch:
**THANAM TRADERS**
(Petrolem Dealer),
Irupalai Junction,
Kopai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை இதழே
இங்கித மங்கையே
திங்கள் தோறும்
எங்கள் வீடு வருக.
தீது போக்கி!
நன்மை ஆக்குக!
நீடு வாழ்க!

# KUMARAVEL COY.

General Merchants & Commission Agents, Dealers in Provisions

**217, 5TH CROSS STREET,**
**COLOBMO-11.**

Phone: 421057.

---

வாழ்க்கையே வணக்கம்
வாழ்த்துகிறோம் வாழ்வதற்காய்
வழிகாட்டு! ஒளியூட்டு!
நின்வருகை நிம்மதிக்கே.
நீ இன்றி நாம் இல்லை.
நாம் இன்றி நாடில்லை.
நீடு வாழ்வோம் நீட்டிய கரங்களுடன்

# *Sivashanmugarajah & Co.*

General Merchants, Commission Agents & Export Suppliers:
Dealers in all kinds of Ekel Brooms, Coir Brooms, Coir Yarns, Jute Twine Paper Bags & all other Local Produce.

**45,4th CROSS STREET,**
**COLOMBO-11.**

**Phone: 436077**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org